கைவர் முனைத் கொள்ள கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு



அம்பிகா ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு, கொழும்பு-11,
தொலைபேசி- 422839, 434238

நல்லூர் இனி நாளைத்

செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6504 1990 ஜுன் 2 சனிக்கிழமை தினபதி

தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்



Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO.11.
Phone: 422839 434238

# வடக்கு கிழக்கில் தேர்தல் நடத்த விரைவில் நடவடிக்கை

## புலிகளுக்கு ஜனாதிபதி உறுதி

### நேற்று கொழும்பில் சந்தித்த போது

கொழும்பு, ஜூன் 1

**வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள அரசியல் சூனிய நிலை நீக்கப்படும். தேர்தல் நடத்தப்படும். மக்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்தி நீதி நியாயமான முறையில் தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்யச் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.**

மேற்கண்டவாறு ஜனாதிபதி ஆர பிரேமதாச நேற்றுத் ...மைச் சந்தித்துப் பேசிய விடுதலைப் புலிகள் குழுவுக்கு உறுதி அளித்தார்,

...வார்த்தை ஜனாதிபதி ...சரித்த இல்லத்தில் மூன்று நேரம நடைபெற்றது.

வடக்கு கிழக்கு அரசியல், ...னாதாரம, சமூகம, ..., விவசாயம, நிர்வாகம சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் பற்றி பேச்சு வார்த்தையின் போது ஆராயப்பட்டது.

...வார்த்தையில் புலிகள் ...ல திரு கோபாலசாமி ...ராஜா (மாத்தயா), ... அன்டன் பாலசிங்கம், ...கரத்தினம யோகி, ...மக்கள் அணித்தலைவி ...யா, திருமதி அடேல் ... ஆகியோர் கலந்து ...ர்,

...யோடு நீதி அமைச் ... - கிழக்கு சமா மாதங்களாக வடக்கு - கிழக்கில் நிலைமை வெகுவாகத் திருந்தி விட்டது. சிவில் நிர்வாகம திறமையாகச் செயற்படுகிறது. மக்கள் தங்கள் அன்றாட அலுவல்களை வழமை போல் கவனிக்கிறார்கள் என்று புலிகள் ஜனாதிபதிக்குத் தெரிவித்தனர்.

முக்கியமாக மற்றும சில விஷயங்களையும அவர்கள் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

1. வடக்கு - கிழக்கு மாகாண சபை இயங்கவில்லை.
2. அதனால் அங்கே அரசியல் சூனிய நிலை ஏற்பட்டிருக்கிறது.
3. இந்த நிலை காரணமாகப் பொது மக்கள் பல பிரச்சினைகளுக்கு முகம கொடுக்க வேண்டியிருக்கிறது.
4. உடனே வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கலைக்க வேண்டும்.

ஜனாதிபதி பேச்சுவார்த்தைகள் மூலம வடக்கு - கிழக்கு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே அரசாங்கத்தின் கொள்கை என்றார்.

பேச்சுவார்த்தை மூலம பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசாங்கம பல நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும ஜனாதிபதி சொன்னார்.

அரசியல் சூனிய நிலையை நீக்கவும, வடக்கு - கிழக்கு மக்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தி நீதி, நியாயமான முறையில் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவும விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும என்றும ஜனாதிபதி உறுதி அளித்தார்.

மக்களைப் பிரித்து வைக்கும காரணிகளை நீக்கி நீதியான சமத்துவ சமுதாயம ஒன்றை உருவாக்கவே தாம உழைத்து வருவதாகவும ஜனாதிபதி எடுத்துக் கூறினார்.

## சோமண்ணை



பதவி இருக்கிறவரையிலை எல்லாம சரிதான். அது பறி போனால் சிக்கல்தான் பாருங்கோ.

அ'புரம் ஆஸ்பத்திரியில்

## பெண் டாக்டர்கள் சட்டப்படி வேலை:

### சத்திரசிகிச்சைகள் இல்லை

கொழும்பு, ஜூன் 1

அனுராதபுரம ஆஸ்பத்திரியில் உணர்வு இழக்கச் செய்யும அனஸ்தெட்டிஸ்ட்ஸ் (பெண் டாக்டர்கள்) இருவர் சட்டப்படி வேலை செய்யும இயக்கத்தை ஆரம்பித்துள்ளனர், இதனால் சத்திர சிகிச்சைகள் யாவும தடைப்பட்டுள்ளன,

வெகு தொலைவிலிருந்து கடமைக்கு வரும இவ்விரு டாக்டர்களுக்கும லீவு வழங்கப்படாததற்கு ஆட்சேபனை தெரிவித்தே சட்டப்படி வேலை செய்வதில் ஈடுபட்டிருக்கின்றனர்,

இதனால் இருபத்தைந்து சதவீதமான சத்திர சிகிச்சைகள் தடைப்பட்டுள்ளன,

அவசர சத்திர சிகிச்சைக்குரிய நோயாளிகள் கொழும்புக்கும, கண்டிக்கும எடுத்துச் செல்லப்படுகின்றனர். (உ-ழ)

## பசளை வகைகள் குறைந்த விலையில்

கொழும்பு, ஜூன் 1

விவசாய ஓய்வூதியத் திட்டம அல்லது விவசாய காப்புறுதித் திட்டம போன்றவற்றில் அங்கத்தவர்களாக இருக்கும விவசாயிகளுக்கு குறைந்த விலையில் பசளை வகைகள் பெற்றுக் கொடுக்கப்படும.

இவ்வாறு விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை ராஜாங்க அமைச்சர் திரு எச் எம ஏ லொக்குபண்டார தெரிவித்தார்,

அரசாங்க உரக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடனும இது தொடர்பாக அமைச்சர் பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறார், (உ-ழ)

## இந்திய

## கிராமோதய சபைகளுக்கும் உறுப்பினர் தெரிவு

கொழும்பு, ஜூன் 1

நாட்டிலுள்ள சகல கிராமோதய சபைகளுக்கும புதிதாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவர். இதற்கான ஆலோசனைகள் சகல அரசாங்க அதிபர்களுக்கும நேற்று அனுப்பி வைக்கப்பட்டன.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா இதனை தெரிவித்தார்.

தற்போது நாட்டில் மொத்தம 14 ஆயிரத்து 746 கிராமோதய சபைகள் இருக்கின்றன. நேற்றுடன் அவற்றின் அதிகாரங்கள் ரத்துச் செய்யப்பட்டு புதிதாக அவை தெரிவு செய்யப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

சில பிரதேசங்களில் புதிதாக கிராம சேவகர் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளதால் அந்தப் பிரதேசங்களில் புதிய கிராமோதய சபைகள் நிறுவப்படும.

குழப்பங்கள் காரணமாக கடந்த காலங்களில் கிராமோதய சபைகள் செயலிழந்து இருந்ததாக அமைச்சர் மேலும தெரிவித்தார்.

(உ-ற)

யாழ் மக்கள் வங்கி

## எல்லா கிளைகளையும் திறந்து ஊழியர்களையும் நியமிக்க எம். பி கோரிக்கை

கொழும்பு, ஜூன் 1

யாழ் மாவட்டத்தில் மூடப்பட்டிருக்கும மக்கள் வங்கிக் கிளைகள் மீண்டும திறக்கப்பட வேண்டும. அவற்றில் நிலவும பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே நவரத்தினம, பிரதமரும நிதியமைச்சருமான டி பி விஜேதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்

## கேகாலையில் இன்று நடமாடும்

ஆகியோர் கலந்து
ர்,
...தியோடு நீதி அமைச்
...க்கு – கிழக்கு சமா
...த் தலைவருமான
...எஸ் ஹமீது உடன்

...படை விலக்கப்
...ர் கடந்த மூன்று

...ன்னறுவையில்

## ...று இமாம்
## ...மேய்னி
## ...னவுதினவிழா

கொழும்பு, ஜூன் 1
...லன்னறுவை இஸ்லா
...நிலையம இமாம
...னியின் முதலாவது
நினைவுதின விழாவை
2ஆம திகதி நடத்தும.
...பொத்தானை ஜூமஆ
...சலில் காலை 9 மணிக்
...த்முல் குர்ஆன்" மஜ்லிஸ்
...டும.

...ா அரபுக் கல்லூரி
...தில் மாலை 3 மணிக்கு
...தினப் பொதுக் கூட்டம
...றும.
...லன்னறுவை ஆஸ்பத்
மாவட்ட முஸ்லிமகள்
...வும இமாமின் நினை
ஒரு தொகுதி உபகர
...ும இன்று அன்பளிப்புச்
...படும.
...விழாவில் ஈரான் இஸ்லா
குடியரசின் தூதரக அதிகா
மாவட்ட நாடாளுமன்ற
...பினர், வடமத்திய மாகாண
...யின் உப தலைவர் உட்பட
கலந்து கொள்வர்.

(உ-007)

வேண்டியிருக்கிறது.
4. உடனே வடக்கு – கிழக்கு மாகாண சபையைக் கலைக்க வேண்டும.
5. புதிதாகத் தேர்தல் நடத்த வேண்டும.
6. அதன் மூலம அரசியல் நிர்வாக இயந்திரத்தைச் செயற்பட வைக்க வேண்டும.
7. இவற்றுடன் 6ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்க வேண்டும. இந்த திருத்தம நாட்டை மேலும பிரிக்கத்தான் உதவியிருக்கிறது.

இவற்றுக்குச் செவிமடுத்த சமத்துவ சமுதாயம ஒன்றை உருவாக்கவே தாம உழைத்து வருவதாகவும ஜனாதிபதி எடுத்துக் கூறினார்.

நாட்டின் நிலையான அமைதி, சுபீட்சம ஆகியவற்றிற்கும இன ஒற்றுமைக்கும அரசாங்கம ஏற்கனவே ஆக்கபூர்வமான பல நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும ஜனாதிபதி தெரிவித்தார்.

இந்த விவரங்களை அரசாங்கம அறிக்கை ஒன்றின் மூலம தெரிவித்திருக்கிறது.

(உ)

# போலி விசாக்களுடன் இலங்கையர்கள் கைது

கொழும்பு ஜூன் 1

இத்தாலியிலிருந்து நாடு கடத்தப்பட்ட போலி விசாக்களைக் கொண்ட இலங்கையர் ஐவர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

குற்றத் தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் இரகசியப் பொலீஸார் இவர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் ஐவரில் மூவர் தமிழர். இருவர் சிங்களவர்.

இவர்கள் ஐவரும தொழில் முகவர் நிலையம ஒன்றுக்குப் பணம செலுத்தி விசா பெற்றே அந்நாட்டுக்குச் சென்றுள்ளனர்.

இவர்களுக்கு வழங்கப்பட்ட விசா போலி என்று இத்தாலிய விமான நிலைய குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் இவர்களைக் கைது செய்து பின்னர் நாடு கடத்தினர்.

விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட ஐந்து இளைஞர்களும ஜூன் மாதம 9ஆம திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

(எ-வ)

இந்திய

# முன்னாள் மந்திரி திவாரிக்கு தண்டனை

## ராஜ்ய சபை வழங்கியது

புதுடில்லி, ஜூன் 1

இந்தியாவின் முன்னாள் மத்தியதுறை அமைச்சர் திரு கே கே திவாரி நேற்று ராஜ்ய சபைக்கு அழைத்து வரப்பட்டு தண்டிக்கப்பட்டார்.

ராஜ்ய சபை தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவை அவதூறு செய்யும விதத்தில் பேசினார் என்ற குற்றஞ்சாட்டின் பேரிலேயே இவர் ராஜ்ய சபையில் தண்டிக்கப்பட்டார்.

பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று முற்பகல் 11-00 மணியளவில் திரு திவாரியை சபைக்கு அழைத்து வந்தனர்.

அச்சமயம சபையின் துணை தலைவரான ஜனாப் நஜ்மா ஹெப்துல்லாஹ்வினால் இவர் எச்சரிக்கை செய்யப்பட்டார்.

அகில இந்திய வானொலி நேற்று இச்செய்தியை ஒலிபரப்பியது.

(உ-வ)

## இன்று நடமாடும் செயலகம்

கொழும்பு, ஜூன் 1

இந்து சமய, இந்து கலாசார ராஜாங்க அமைச்சின் நடமாடும செயலகம இன்று தேகாலையில் நடைபெறும.

ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ், அமைச்சின் செயலாளர், பணிப்பாளர் மற்றும அதிகாரிகளும இதில் கலந்து கொள்வர்.

இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை இந்த நடமாடும செயலகம தேகாலை கச்சேரியில் இயங்கும.

கோவில் நிர்வாக சபைகள், மன்றங்கள், சமூக இயக்கங்கள், ஆகியவை எதிர்நோக்கும பிரச்சினைகளை அமைச்சர் கேட்டறிவார்.

(உ-ங)

...மும, பிரதமரும நிதியமைச்சருமான டி பி விஜேதுங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

யாழ் மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் வேண்டிய அளவு உத்தியோகத்தர்கள் இல்லை. இதனால் மக்களுக்கு சிறந்த சேவையை வழங்க முடியாத நிலையில் இவ்வங்கிக் கிளைகள் உள்ளன.

அடகு வைக்கப்பட்ட நகைகளைத் திருப்பி வழங்குவதில் அநாவசிய காலதாமதம காட்டப்பட்டு வருகிறது. 1983ஆம ஆண்டின் பின்னர் இக்கிளைகளில் ஏற்பட்ட பதவி வெற்றிடங்கள் இன்னும திரப்பப்படவில்லை.

இப்படி திரு நவரத்தினம தமது கடிதத்தில் சுட்டிக்காட்டி மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

(உ-032)

# விடுதியிலிருந்து தாதி கடத்தல்

கொழும்பு, ஜூன் 1

பலப்பிட்டி ஆஸ்பத்திரியில் கடமையாற்றும தாதி ஒருவரை கடந்த வியாழக்கிழமை இரவு முதல் காண வில்லை என சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரஸ்தாப தாதி தங்கியிருந்த விடுதிக்குச் சென்ற இனந்தெரியாத நபர்கள் அவரை பலவந்தமாக கடத்திச் சென்றதாக கூறப்படுகிறது.

இந்த தாதியை கண்டுபிடித்து தருமாறு ஐக்கிய தாதிகள் சங்கம, சுகாதார மற்றும மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்திடம வேண்டுகோள் விடுத்துள்ளது.

(உ-மு)

# சீசன் டிக்கட், பாடசாலை: பஸ் சேவை தொடரும்

கொழும்பு, ஜூன் 1

இலங்கை போக்குவரத்து சபை மக்கள் மயமாக்கப்பட்ட போதிலும பஸ் பயணிகளுக்கான பருவ சீட்டுக்களை (சீசன் டிக்கட்டுக்களை) மேற்படி சபை தொடர்ந்து வழங்கும.

இவ்வாறு போக்குவரத்து அமைச்சர் திரு விஜேபால மெண்டிஸ் தெரிவித்தார்.

இ போ சபையினால் ஜூன் மாதத்துக்காக வழங்கப்பட்டுள்ள பருவச் சீட்டுக்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக வதந்திகள் பரவியுள்ளன.

இந்த செய்தியில் எவ்வித உண்மையும இல்லை.

போக்குவரத்துச் சபை மக்கள் மயப்படுத்தப்பட்ட போதிலும பொது மக்களுக்கு வழங்கப்படும சேவைகளும சலுகைகளும எக்காரணம கொண்டும நிறுத்தப்பட மாட்டா.

பாடசாலை மாணவர்களின் நலன் கருதி மேற்கொள்ளப்படும பாடசாலை பஸ் சேவைகளும தொடர்ச்சியாக நடத்தப்படும.

இப்படி அமைச்சர் விஜேபால மெண்டிஸ் மேலும தெரிவித்தார்.

(உ-வ)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

நல்லூர் கிளை நூலகம்

# அதிக வாடகை இல்லையேல் வெளியேற்றம்

## புத்தளம் கடைக்காரர்கள் 52 பேர் எதிர்நோக்கும் ஆபத்து

புத்தளம் ஜூன் 1

புத்தளத்தில் அதிக வாடகை செலுத்தா விட்டால் கடைகளை விட்டு வெளியேற வேண்டிய அபாயத்தை 52 கடைக்காரர்கள் எதிர்நோக்குகிறார்கள்—

"புத்தளம் - குருநாகல் வீதியில் உள்ள 52 கடைத் தொகுதிகளுக்கு புத்தளம் நகரசபை அதிக வாடகை கேட்டு புதிய தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

இதனை செலுத்தாதவர்களை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது— இது பற்றி முறையான விசாரணை நடாத்தி நிவாரணம் வழங்கப்படல் வேண்டும்"

இப்படி வடமேல் மாகாண சபையின் குருநாகல் தொகுதி உறுப்பினர் ஜனாப் அப்துல் ரசூல் (ஸ்ரீ ல மு கா) சபையில் கேள்வி எழுப்பு கோரிக்கை விடுத்திருக்கிறார்—

வடமேல் மாகாண சபையின் மாதாந்த அமர்வு அண்மையில் குருநாகல் நகர மண்டபத்தில் நடைபெற்றது—

அவைத் தலைவர் திரு ரத்ன குணசேகரா அமர்வுக்குத் தலைமை வகித்தார்—

கேள்வி நேரத்தின் போது ஜனாப் அப்துல் ரசூல் இக் கோரிக்கையை எழுப்பினார்—

மாகாண சபையின் புத்தளம் தொகுதி உறுப்பினர் டாக்டர் ஐ எம் இல்யாஸின் இக் கேள்வியை ஜனாப் அப்துல் ரசூல் முதலமைச்சரிடம் வினவினார்—

கேள்வியின் முழு விவரமும் வருமாறு—

புத்தளம் நகரசபை எல்லைக்குள் குருநாகல் வீதியில் 52 கடைத் தொகுதிகள் உள்ளன. இந்த வர்த்தக நிலையங்களுக்கு கடந்த 22 வருட காலமாக குறைக் கூலியே செலுத்தப்பட்டு வந்துள்ளது—

ஆனால், நகரசபை நிர்வாகம் சமீபத்தில் நிறைவேற்றியுள்ள தீர்மானப்படி அதிகப்படியான வாடகை கோரப்பட்டுள்ளது—

அத்துடன் புதிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது—

இவற்றிற்கு இணங்காதவர்களை அந்த வர்த்தக நிலையங்களிலிருந்து அப்புறப்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது—

எனவே அப்படி உடைமையாக்கிக் கொள்வதை உடனடியாக நிறுத்தி முறையான விசாரணை ஒன்றை நடாத்தி நீண்ட காலமாக அவ்விடத்தில் வியாபாரம் செய்து வரும் வியாபாரிகளுக்கு நிவாரணம் வழங்க அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா? என வினவினார்—

இக் கேள்விக்கு அடுத்த கூட்டத்தின் போது பதில் அளிக்கப்படும் என ஆளுங்கட்சி தரப்பில் பதில் அளிக்கப்பட்டது—

(உ-241)

# இளம் பெண்ணின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது

## பொலீஸாரால் மானபங்கப்படுத்தி கொலை செய்யப்பட்டார் என புகார்

கொழும்பு, ஜூன் 1

பொலீஸாரால் மானபங்கப்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் இளம் பெண்ணின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்கென கொழும்புக்கு கொண்டு வரப்பட்டது.

தெக்கிராவ மாஜிஸ்திரேட் டபிள்யூ தே தே எதிரிவிக்ரமவின் பணிப்புரையின் பேரில் இச்சடலம் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டது.

18 வயதான கொலையுண்ட சாமிளா துஷாரியின் சடலம் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி எம் எஸ் எல் சலகாதுவினால் பிரேத பரிசோதனைக்குட்படுத்தப்படும்.

ஏற்கனவே இச் சடலத்தைப் பரிசோதித்த கல்னேவ மாவட்ட மருத்துவ அதிகாரி சமர்ப்பித்த பிரேத பரிசோதனை அறிக்கை தெளிவானதாக இல்லை என்று கருதியதாலேயே சடலம் தோண்டி எடுக்கப்பட்டு கொழும்புக்கு மேல் பரிசோதனைக்கென அனுப்பி வைக்கப்பட்டது,

இக்கொலை தொடர்பாக கல்னேவ பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலீஸார் சந்தேகத்தின் பேரில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் பத்தாயிரம் ரூபா உறுதிப்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்,

அடையாள அணிவகுப்பின் போது சாட்சிகளால் அடையாளம் காட்டப்பட்ட பொலீஸாரே விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இக்கொலை தொடர்பாக நடைபெற்ற மாஜிஸ்திரேட் விசாரணையின் போது காலஞ்சென்ற துஷாரியின் தாயார் எச் கே பிரேமாவதி சாட்சியமளித்தார்,

கடந்த மே மாதம் இருபதாம் திகதி துஷாரியை வீட்டில் விட்டு விட்டு வயலுக்குச் சென்றேன். அன்று மாலை நானும் என் கணவரும் வீடு திரும்பிய போது மகள் வீட்டில் இருக்கவில்லை. நாம சந்திக்குச் சென்று கடை முதலாளி ஒருவரிடம் விசாரித்த போது பிற்பகல் ஒரு மணியளவில் காலஞ்சென்றவர் பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவரோடு பேசிக் கொண்டிருந்ததைக் கண்டதாக தெரிவித்தார்,

கல்னேவ மத்திய மகா வித்தியாலய காவற்காரரிடம் விசாரித்த போது பாடசாலை நுழை வாயில் அருகே காலஞ்சென்றவர் நான்கு பொலீஸாருடன் பேசிக் கொண்டிருந்ததாகவும் பின்னர் தியேட்டர் பக்கமாகச் சென்றதாகவும் கூறினார்.

அங்கு சென்ற போது மரத்தடியில் ஆடைகள் களையப்பட்ட நிலையில் காலஞ் சென்றவரது உடல் கிடந்தது, சிவப்பு நிற பட்டியொன்று கழுத்தைச் சுற்றிக் காணப்பட்டது,

இவ்வாறு தமது சாட்சியத்தில் தெரிவித்த அவர் தனது மகளுக்கு பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் இனிப்புகளை வழங்கியதை ஏற்கனவே ஒருமுறை கண்டதாகவும் அவரே இக் கொலைக்குக் காரணமாக இருக்க வேண்டுமென தாம் சந்தேகிப்பதாகவும் கூறினார்,

மேல் விசாரணை எதிர்வரும் நான்காம் திகதி நடைபெறும்,

(ந-032)

# இன்றைய திரைகளில்

இப்பொழுது காட்சி தருகிறுன்!!

கெப்பிட்டல்
(கொட்டாஞ்சேனை)
10-30, 2-30, 6-00, 9-30

ரியோ
(கொம்பனித்தெரு)
(குளிரூட்டப்பட்டது)
10-30, 2-30 6-00, 9-00

ராணி
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00, 9-00

கமல்ஹாசன் — அமலா நடித்த

சத்யா
(கலர்)

2 வது வாரம

செல்லமஹால்
(கொட்டாஞ்சேனை)
2-30, 6-00, 9-30

கொன்கோட்
(தெகிவளை)
10-30, 2-00, 6-00, 9-00

மனோகரா
(யாழ்நகர்)
10-30, 2-00, 6-00, 9-00

ரஜனிகாந்த் — கௌதமி பேபி ஷாலினி — வி கே ராமசாமி நடித்த

ஏ வி எமமின்
ராஜா சின்ன ரோஜா
(கலர்)

3 வது வாரம


முருகன்
(ஜிந்துப்பிட்டி)
2-15, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-15

கடைசி வாரம

ஈரோஸ்
(பாமன்கடை)
2-30, 6-00, 9-30
சனி/ஞாயிறு 10-30

சுபராஜ்
(மட்டக்களப்பு)
2-30, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-30

பயங்கர சண்டை காட்சிகளும் இனிமையான பாடல்களும் நிறைந்த சித்திரம்



## கவிதை நூல் கையளிப்பு

சிந்தாமணி கவிஞர் வட்டத் தலைவரான டாக்டர் ஜின்னாஹ் ஷெரிபுத்தீன் சமீபத்தில் தமது முத்து நகை, பாலையில் வசந்தம் என்ற இரு கவிதை நூல்களையும் வர்த்தக அமைச்சர் ஜனாப் ஏ ஆர் மன்சூரிடம் கையளித்த போது எடுத்த படம்,

பக்கத்தில் சி க வ செயலாளர் ஜனாப் எஸ் ஐ நாகூர் கனியும், வழக்கறிஞர் ஜனாப் எஸ் முத்து மீரானும், அமைச்சரின் செயலாளர் திரு செல்வரத்தினமும் காணப்படுகின்றனர்.

(ஐ)

பொசனை முன்னிட்டு

# அனுராதபுரத்தில்

## மூன்று தினங்களுக்கு சாராய விற்பனைக்கு தடை

கொழும்பு ஜூன் 1

பொசன் பூரணையை முன்னிட்டு அனுராதபுர மாவட்டத்திலுள்ள சகல சாராயத் தவறணைகளும் எதிர்வரும் 6ஆம் 7ஆம் 8ஆம் திகதிகளில் மூடப்படும்.

அனுராதபுரம் மாகாண சபை அமைச்சு அலுவலகத்தில் திரு சி. பி விஜேதுங்க நடத்திய அவசரக் கூட்டம் ஒன்றில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இங்குவரும் லட்சக்கணக்கான யாத்திரிகர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதுடன் அவர்களுக்கு உணவு, சுகாதார தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் பிரதமர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

உற்சவ காலத்தில் இப்பகுதியில் புலனத் கொடி பறக்க விடப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

யாத்திரிகர்களின் பாதுகாப்புக் கருதி 1500க்கும் மேற்பட்ட பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் அங்கு சேவையில ஈடுபடுத்தப்படுவர்.

உணவு வசதிக்காக எட்டு கூட்டுறவு சிற்றுண்டிச் சாலைகள் அமைக்கப்படும். போக்குவரத்து வசதி கருதி இ ம போ சபையைச் சேர்ந்த 100 பஸ்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்படும்.

விசேஷ ரயில் சேவைகளும

## இன்னியாவில்

# உணவு முத்திரை விநியோகத்தில் மோசடி

திருகோணமலை, ஜூன் 1

உணவு முத்திரை விநியோகத்தில் கிண்ணியாப் பிரதேசத்தில் பெரும் மோசடி நிலவியிருப்பது கண்டு கணக்காய்வாளர்கள் அதிர்ச்சி

உணவு முத்திரை பெறத் தகுதியில்லாதவர்களுக்கும் பணக்காரர்களுக்கும் மேற்படி உணவு முத்திரைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில்

திருகோணமலை, ஜூன் 1

உணவு முத்திரை விநியோகத்தில் கிண்ணியாப் பிரதேசத்தில் பெரும் மோசடி நிலவியிருப்பது கண்டு கணக்காய்வாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

வடக்கு, கிழக்கு மாகாண அரசு, கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து கணக்காய்வு, செய்யச் சென்ற போது இந்த ஊழலை கண்டு பிடித்துள்ளதாக கணக்காய்வாளர் திரு. யோகராசா தெரிவித்தார்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்,

கிண்ணியாப் பிரதேசத்தில் உள்ள அநேக சங்கங்களில் பெயர்ப் பலகைகள் இல்லை. விநியோகிப்பதற்குப் பொருட்கள் இல்லை. ஆனால் உணவு முத்திரை விற்பனை நடக்கிறது.

உணவு முத்திரை பெறத் தகுதியில்லாதவர்களுக்கும் பணக்காரர்களுக்கும் மேற்படி உணவு முத்திரைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

இவ்வுணவு முத்திரைகளைப் பெற்றவர்கள் அதை வைத்துக் கொண்டு வியாபாரம் செய்கின்றனர். பொருட்கள் இல்லாத சங்கத்தில் உணவு முத்திரைக்கு பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என கிளை முகாமையாளர் பொய் கூறுகின்றார்.

இந்த ஊழலைத் தடுக்க சட்டமில்லை. தடுப்பதற்கு மேல் அதிகாரிகள் முயன்றால் பயமுறுத்தல்கள் செய்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஊழல்களை உடனடியாக நிறுத்தி ஊழல் புரிபவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

(ஜ-287)

## வழக்கு விரைவில் தாக்கலாகும்

கொழும்பு ஜூன் 1

வவுல்கெலே வத்தை படுகொலைச் சம்பவங்களையடுத்துக் கைதான சந்தேக நபர்களுக்கு எதிராக விரைவில் வழக்குத் தொடரப்படவிருக்கிறது.

இதுகால ரகசியப் பொலீஸ் அறிக்கைகளை பொலிஸ் மா அதிபர் சட்டமா அதிபரிடம் கையளித்துள்ளார்.

இக்கொலைச் சம்பவங்கள் குறித்து இதுவரை வீரகல, கனேமுல்ல ஆகிய பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த 14 பொலீஸ் உத்தியோகத்தர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுல்கெல்லே வத்தையில் உள்ள சுமார் 160 க்கும் மேற்பட்டோரிடம் இருந்து இது தொடர்பான சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(எ-ர)

## சடலம் பதுளைக்கு மாற்றம்

கொழும்பு ஜூன் 1

நுவரெலியா ஆஸ்பத்திரி சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்த பளக்பூல் தோட்டத்தைச் சேர்ந்த எச் எம் சாந்துலதாவின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பதுளைக்கு கொண்டு செல்லப்பட்டது.

நுவரெலிய ஆஸ்பத்திரியில் சட்ட வைத்திய அதிகாரி இல்லை. இதனாலேயே மேற்படி சடலத்தை நுவரெலியா பொலிஸார் பதுளை சட்ட வைத்திய அதிகாரியிடம் எடுத்துச் சென்றனர்.

கடந்த 27ஆம் திகதியன்று வீட்டிலிருந்து திடீரென காணாமற் போன இப்பெண் சடலமாகக் காட்டிலிருந்து மீட்கப்பட்டமை தெரிந்ததே.

(நு-வ)

பக்கத்தில் சி க வ செயலாளர் ஜனாப் எஸ் ஐ நாகூர் கனியம், வழக்கறிஞர் ஜனாப் எஸ் முத்து மீரானும், அமைச்சரின் செயலாளர் திரு செல்வரத்தினமும் காணப்படுகின்றனர். (ஐ)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில்

# பாதிக்கப்பட்ட மீனவருக்கு நிவாரணம் வழங்க வேண்டும்

## ஹிஸ்புல்லா வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 1

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தற்போது வேகமாகப் பரவி வரும் மீனின நோய்களை தடுத்து நிறுத்துவதோடு, பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உடன் நிவாரணம் வழங்க வேண்டும்

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தவிசாளருமான எம் எல் ஏ எம் ஹிஸ்புல்லாஹ், கடற்றொழில் நீரியல் அமைச்சர் திரு ஜோசப் மைக்கல் பெரேராவிடம் அவசரத் தந்தி மூலம் கேட்டுள்ளார்.

மேலும் அத்தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மட்டக்களப்பு அம்பாறை பிரதேசங்களில் இந்நோய் முதலில் ஆறுகளில் மட்டுமே காணப்பட்டது- ஆனால் தற்போது இந்நோய் கடல் மீனினங்களுக்கும் பரவியுள்ளது-

சுமார் 3 மாதங்களுக்கு மேலாக இந்நோய் தொடர்ந்திருந்து வருகிறது- எனக்கு கிடைத்துள்ள தகவல்களின்படி ஆயிரக்கணக்கான ஏழை மீனவர்கள் தொழிலின்றி பட்டினியால் வாடுகின்றனர்.

பிரதான உணவுகளின் ஒன்றாக மீனை உட்கொண்டு வந்த லட்சக்கணக்கான அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட மக்கள் இந்நோய் காரணமாக பெரிதும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

மீன்களில் இருந்து ஒரு விதமான புழு வெளி வருவதாக எனக்கு மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பாக ஆராய்ந்து அவசர நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென விசேட பயிற்சி பெற்றவர்கள் அடங்கிய குழுவொன்றை அனுப்பி அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

பாதிக்கப்பட்டுள்ள ஏழை மீனவர்களுக்கு அவசரமாக நிவாரணங்களை வழங்க ஆவன செய்யவும்.

இப்படி ஜனாப் ஹிஸ்புல்லாஹ் அமைச்சரைக் கேட்டுள்ளார்.

(ஐ-ங)

# தீவிரவாத சந்தேக நபர்கள் 201பேர் படையினரிடம் சரண்

கொழும்பு ஜூன் 1

அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க 201 தீவிரவாத சந்தேக நபர்கள் சரணடைந்துள்ளனர். மாத்தறைப் பகுதியில் மட்டும் 83 தீவிரவாத சந்தேக நபர்கள் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்துள்ளனர்.

அரசாங்கம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் இப்படிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது-

கொழும்பில் ஒரு தீவிரவாத சந்தேக நபரும், களுத்துறையில் மற்றொரு தீவிரவாத சந்தேக நபரும், பாதுகாப்பு படையினரிடம் சரணடைந்துள்ளனர்.

பொலன்னறுவையில் மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான பெஜரோ ஜீப்பொன்றை இனந்தெரியாத ஆயுதபாணிகள் சாரதியுடனும், பயணி ஒருவருடனும் கடத்திச் சென்றுள்ளனர்.

கடத்தப்பட்டவர்களைத் தேடுவதற்கு பிரதேச புலிகள் இயக்கத் தலைவரின் உதவி கோரப்பட்டுள்ளது.

கண்டியில் பாதுகாப்புப் படையினர், தீவிரவாத ஒளிவிடமொன்றில் "கல்கட்டாஸ்" துப்பாக்கிகளை கண்டெடுத்தனர்.

பாதுகாப்புப் படையினரின் சீருடையில் சென்ற ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று அனுராதபுரத்தில் இரண்டு கடைகளைக் கொள்ளையடித்துள்ளது.

இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது:

(எ-455)

தான யாத்திரிகர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிப்பதுடன் அவர்களுக்கு உணவு, சுகாதார தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் கூட்டுறவு சிற்றுண்டிச் சாலைகள் அமைக்கப்படும். போக்குவரத்து வசதிக்கு இ ம போ சபையைச் சேர்ந்த 100 பஸ்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்படும்.

விசேஷ ரயில் சேவைகளும் நடத்தப்படும், 1500 தற்காலிக மலசல கூடங்களும் அமைக்கப்படும்.

பாதுகாப்புச் சேவையில் ஈடுபடும் இராணுவத்தினர் தங்குவதற்காக ஜூலை 1ஆம் திகதி முதல் 10 ஆம் திகதிவரை அப்பகுதிகளிலுள்ள சகல பாடசாலைகளையும் மூடிவிடவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எரிசக்தி மின்சக்தி அமைச்சர் திரு சந்திரா பண்டார வடமத்திய மாகாண முதலமைச்சர் திரு மகிந்த சோம உட்பட பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

(எ-ர)

## பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பு

கொழும்பு, ஜூன் 1

இஸ்லாமிய அடிப்படையிலான பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பொன்று நாளை (3 ஆம் திகதி) காலை 10 மணிக்கு கண்டி கட்டுகலை சித்தி லெவ்வை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

கோட்டக்கல்வி அதிகாரியும் பிரபல இலக்கியவாதியுமான அல்ஹாஜ் எம் வை எம் முஸ்லிம் இவ்வைபவத்துக்கு தலைமை வகிப்பார்.

டிப்ளோமா பட்டதாரி ஆசிரியையான செல்வி அரபா தலைமையிலேயே இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெறும்.

கண்டி, கட்டுகலை இளம் முஸ்லிம் மாதர் சங்கம் இந்த பயிற்சி வகுப்பை ஏற்பாடு செய்துள்ளது.

(நு-வ)


சுபராஜ்
(மட்டக்களப்பு)
2-30, 6-15, 9-15
சனி/ஞாயிறு 10-30
பயங்கர சண்டை காட்சிகளும் இனிமையான பாடல்களும் நிறைந்த சித்திரம்
அர்ஜுன் — சசிகலா
சீதா — செந்தில்
பேபி ஷாலினி — சரத்பாபு
நடித்த
சங்கர் குரு
(கலர்)

8 வது வாரம்
வின்சர்
[யாழ்நகர்]
10-30 2-30, 6-00
நியூதிவொளி
(நுவரெலியா)
10-20, 2-30, 6-00
பாக்யராஜ் — ஷோபனா
சோமயாஜுலு — மனோரமா
குமரிமுத்து நடித்த
இது நம்ம ஆளு
[கலர்]

9 வது வாரம்
சமந்தா
(கொட்டாஞ்சேனை)
(கடைசி வாரம்)
10-00, 2-00, 6-00, 9-30
பிரின்ஸ்
(ஹட்டன்)
2-30 6-00
சனி/ஞாயிறு 10-30
ஸ்ரீதர்
(யாழ்நகர்)
10-30 2-30, 6-30
ரஜனிகாந்த் — ராதிகா
நடித்த
சத்யா மூவிஸ்
ஊர்க்காவலன்
(கலர்)

# உள் பாவாடையை வீசிவிட்டு உயிரை மீட்டுகொண்ட நடிகை

## படப்பிடிப்பின் போது தீ விபத்து

கண்ணகியாக கண்ணாமபாவால் மட்டும தான் நடிக்க முடியுமா? என்று சவால் விடுவத போல் "பூமபுகார்" படத்தில் கண்ணகியாக நடித்து புகழ் பெற்றவர் விஜயகுமாரி.

அதேபோல் "நானும ஒரு பெண்ணில்" கறுப்புப் பெண்ணாக நடித்து தாய்க் குலத்தின் நெஞ்சை நெகிழ்த்தியவர் இவர்.

அண்மையில் இவரை சந்திக்கும வாய்ப்பு நமது நிருபருக்குக் கிடைத்தது— அச்சந்தர்ப்பதில் விஜயகுமாரியிடம "உங்களால் மறக்க முடியாத சமபவம ஏதாவது படப்பிடிப்பின் போது நடந்துள்ளதா?" என்ற கேட்டதற்கு

பி எஸ் வி பிக்சர்சின் "வணக்கம வாத்தியாரே" படத்தில் நடித்துக் கொண்டிருந்த போது பயஙகர திவிபத்திற்குள் சிக்கிக் கொண்டேன். இந்தச் சமபவத்தை என்னால் மறக்க முடியாது என்று கூறி, எப்படி இந்த விபத்து நடத்தது என்பதை விஜயகுமாரி விளக்கினார்—

"நான் சாதாரண நடுத்தர வர்க்கத்துப் பெண்ணாக அந்தப் படத்தில் நடித்தேன்.

வீட்டில் தனியாகப் பாயில் படுத்திருக்கும என்னை வீட்டோடு நெருப்பு வைத்துக் கொளுத்தி விடுவத போல் காட்சி படமாக்கப்பட்டது.

நான் பாயில் படுத்திருந்தேன்.



விஜயகுமாரி

தீ என்னைச் சீறி எரிவது போல் இருக்க வேண்டும என்பதற்காக பாயைச் சுற்றி பெற்றோலைப் போன்ற "சொளுஸினை" மெழுகியிருந்தார்கள்.

இதற்கு முன் நான் இப்படிப் பட்ட காட்சியில் நடித்ததில்லை என்பதால் அந்த "சொளுஸின்" எப்படி எரியும என்பது தெரியாது.

காட்சி ஆரமபமாகி நெருப்பு எரியும கட்டம வந்தது எங்கோ ஒரு மூலையில் இருந்த திப்பந்தத்தை "சொளுஸின்" பூசப்பட்டிருந்த தரையின் பக்கம் காட்டியதுமே குபீர் என்று இமைப் பொழுதில் என்னைச் சுற்றித் தீப்பிழமபு கொழுந்து விட்டு எரியத் தொடஙகி விட்டது.

அதே நேரம என் சேலை முந்தானையிலும திப்பற்றிக் கொண்டது.

உடனே நான் முந்தானையை உருவி தியை அணைக்க முனைந்தேன். முடியவில்லை. படிப்படியாக சேலை முழுவதும பற்றிக் கொண்டு விட்டது.

நெருப்பின் தாக்குதல் பொறுக்க முடியாமல் கத்தினேன். ஆனால் காட்சிப்படி நான் அப்படி நடிக்க வேண்டும என்பதால் நான் உணர்ச்சி வசப்பட்டு நடித்துக் கொண்டிருப்பதாக எல்லோரும நினைததுக் கொண்டிருந்து விட்டார்கள்,

தப்பித்து ஓட எந்தப் பக்கம திருமபினாலும வழி இல்லாதவாறு நெருப்பு தலைக்கு மேல் எரிந்து கொண்டிருந்தது.

அப்படித் தப்பினாலும வெளியே செல்ல காமெரா இருக்கும பகுதியைத் தவிர வழியும இல்லை.


இதற்கிடையில் நெருப்பு கடுமையாகத் தாக்கி விடவே சேலை முழுவதையும வேகமாக உருவி எறிந்த விட்டேன்.

அப்படியும நெருப்பின் தாக்கம நிற்கவில்லை.

உடனே உள்பாவாடையையும உருவி எறிந்துவிட்டு வேகமாக நெருப்பைத் தாண்டி ஒரு சோபாவின் பின்னால் ஒளிந்து கொண்டேன்.

அதற்குப் பிறகுதான் நான் அலறியது எல்லாம நடிப்பு இல்லை. உண்மையாகவேதான் உயிருக்குப் போராடியிருக்கிறேன் என்ற தெரிந்து உடனே டைரக்டர் அமீர்ஜான் ஓடிப் போய் ஒரு போர்வையை எடுத்து வந்து "என்" மேல் போர்த்திய பிறகுதான் நான் எழுந்து நிற்க முடிந்தது!

உடனே மருத்துவமனையில் கொண்டு போய் சேர்த்தார்கள். அன்று மட்டும நான் நூல் புடைவை கட்டியிருக்காமல் நைலக்ஸ் புடைவையோ டெரிகாட்டன் புடைவையோ கட்டியிருந்தால் நிச்சயமாக நான் உயிர் பிழைத்திருக்க மாட்டேன்!" என்றார் விஜயகுமாரி.



நினைவை விட்டு நீஙகாமல், நித்தமும நிலைக்கக் கூடியது, சத்தமின்றி கொடுக்கும முத்தம ஒன்றுதான், எனவேதான் இவர் "வரவு நல்ல உறவு"க்காக முத்த மழையை வாரி இறைக்கிறாரோ?

[இளவரசன் — ஜெ லலிதா]

(இ—10)

# வாணி நாயகியாக

# வடக்கு கிழக்கு தொகுதிகளில் வெளிநாடுகளின் உதவியில்நீர் விநியோகம்

தமபலகாமம மே 31

வடக்கு, கிழக்கில் நீர் வழஙகல் வடிகால் சிரமைப்புப் பணிகளுக்காக ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, கனடா, ஆஸ்திரேலியா, யுனிசெப் ஆகியன பெருமளவு நிதியுதவியை வழஙகியுள்ளன. மத்திய புனர்வாழ்வு அமைச்சின் ஊடாக இந்நிதி வழஙகப்பட்டுள்ளது.

இந்நிதியிலிருந்து 1 கோடி 18 லட்சம ரூபா கிளிநொச்சி மாவட்டத்தில் நீர்த்தாங்கிக் குழாய் இணைப்பு வேலைகளுக்கு வழஙகப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்திற்கு 83 லட்சம ரூபாவும வழஙகப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அரசு மூன்று லட்சம ரூபா பெறுமதியான நீரிறைக்கும இயந்திரஙகளையும வழஙகியுள்ளது:

(ரி—288)

## மலையக மக்களின் பல்வேறு குறைகள் தீர ஆவன செய்க

எட்டியாந்தோட்டை மே 31

இந்நாட்டின் தோட்டப் பெருஙகுடி மக்களின் பிள்ளைகள் கல்வித்துறையில் மேமபாடடைய வேண்டுமானால் அவர்களைச் சார்ந்தோர்கள் கல்விப் பணிமனைகளில் இடம பெறவேண்டும.

இவ்வாறு கோரும மகஜர் ஒன்றை கல்வி அமைச்சர் மாண்புமிகு லலித் அத்துலத் முதலிக்கு தோட்ட மக்கள் நலன் புரிச் சபையின் அமைப்பாளர் திரு எஸ் பி ஜெயரத்தினம அனுப்பி வைத்துள்ளார்.

அவர் தம மகஜரில் குறிப்பிட்டிருப்பதாவது—

கேகாலை மாவட்டத்தில் 65க்கும மேற்பட்ட தமிழ்ப் பாடசாலைகள் இருக்கின்றன. இவைகளை மேற்பார்வை செயவதற்கு தமிழ் கல்வி அதிகாரிகளோ அல்லது உத்தியோகத்தர்களோ இல்லை.

தெகியோவிற்ற — உருவான் வெல்லை கேகாலை ஆகிய உப கல்வி காரியாலயஙகளுக்கு தமிழ் கல்வி அதிகாரிகளும உத்தியோகத்தர்களும நியமனம பெற வேண்டும.

தமிழ் அரச கரும மொழியாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருந்தாலும கேகாலை மாவட்ட தமிழ்ப் பாடசாலைகள் சிஙகள மொழியிலே அனுப்பப் படும கடிதஙகளுக்கு பதில் அனுப்பத் தள்ளப்பட்டுள்ளன.

எட்டியாந்தோட்டை உதவி அரசாஙக பிரிவில் உள்ள புனித மரியாள் தமிழ் வித்தியாலயமும தெகியோவிற்ற உதவி அரசாஙக பிரிவில் உள்ள தெகியோ மகா வித்தியாலயஙகளாக தரமுயர்த்தப்பட வேண்டும.

கேகாலை மாவட்டத்தில் தமிழ் மகா வித்தியாலயமோ தமிழ் மத்திய மகா வித்தியாலயமோ இல்லை, இக்குறைதீர ஆவன செய்ய வேண்டும.

அண்மையில் பயிலுநர் ஆசிரியர்கள் நியமனஙகள் வழஙகப்பட்டன. நியமனஙகளின் போதும இடமாற்றத்தின் போதும பல குளறுபடிகள் இடம பெற்றுள்ளன. இவை தீர்க்கப்பட வேண்டும. மேற்படி குறைகளும அகற்றப்பட வேண்டும என்ற அம்மகஜரில் கூறப்பட்டுள்ளது.

(ரி—345)

## இணைபிரியா தம்பதியர் ஒரே நாளில் மரணம்

### சடலங்கள் ஒன்றாக

கொழும்பு ஜூன் 1

நீண்ட காலமாக இணை பிரியாது வாழ்ந்த கணவன் — மனைவி இருவரும ஒரே நாளில் ஒருவர் பின் ஒருவராக இறந்தனர்—

இந்தச் சமபவம நாவலப்பிட்டி பகுதியில் இடமபெற்றுள்ளது—

நாவலப்பிட்டி ரக்ஸாவ தோட்டத்தைச் சேர்ந்த கருப்பையா (வயது 95), அவரது மனைவி பொன்னமமா (வயது 80) ஆகியோரே இவ்வாறு ஒரே நாளில் இறந்தவர்களாவர்.

கணவன் மரணமாகி சுமார் மூன்று மணி நேரத்தின் பின்னர் மனைவியும காலமானார்.

இந்த வயோதிப தமபதியரின் சடலஙகள் ஒன்றாக அடக்கம செய்யப்பட்டனர்.

(ல—வ)


# பகிரங்க சொற்பொழிவு

ஈரான் இஸ்லாமியக் குடியரசின் ஸ்தாபகரும்
இஸ்லாமியப் புரட்சியின் மறைந்த தலைவருமான

# ஆயதுல்லா ருஹுல்லா இமாம் கொமய்னி

அவர்களின் மறைவின்
முதலாம் ஆண்டை

# வாணி நாயகியாக புரட்சிக்கு புதியவன்

வாணிவிஸ்வநாத் புதிய படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார்.

ஸ்ரீகாசாம்பூ பிலிம்ஸ் பட நிறுவனம் சார்பில் பானுமதி ராமநாதன் தயாரிக்கும் படம் "புரட்சிக்கு புதியவன்"

டி ஏ திருமங்கை டைரக்ட் செய்ய எம் லூர்துசாமி ஒளிப்பதிவு செய்கிறார். கதை, திரைக்



வாணி விஸ்வநாத்

கதை வசனத்தை டி வி ராமநாதக் குருக்கள் எழுதுகிறார். வாலி, புலமைப்பித்தன் பாடல்களுக்கு சங்கர் கணேஷ் இசை அமைக்கிறார்கள்.

இதில் முரளி ஆனந்தராஜ் சந்திரசேகர் நாகேஷ் ஜெய்சங்கர் எம என் நம்பியார் வெண்ணிற ஆடை மூர்த்தி கே. ஆர் விஜயா வாணிவிஸ்வநாத், மனோரமா ஆகியோருடன் டி. வி ஆர் என்ற புதிய கதாநாயகன் அறிமுகமாகிறார்.

படத்தின் தொடக்க விழா அருணாசலம் ஸ்டுடியோவில் நடைபெற்றது. நடிகை கே ஆர், விஜயா குத்துவிளக்கு ஏற்றினார். நாகேஷ் கெமராவை முடுக்கி வைத்தார். (இ-10)

## ராஜசேகர் ஜீவிதா இணைய நெஞ்சு பொறுக்குதில்லையே


பாபுராவ் வழங்க ஈத்தரம் கிரியேஷன்ஸ் தமிழில் மொழி மாற்றம் செய்து விரைவில் திரையிடும் படம் "நெஞ்சு பொறுக்குதில்லையே"

இந்தப் படத்தில் "இது தாண்டா பொலீஸ்" புகழ் டாக்டர் ராஜசேகர் ஜீவிதா இளவரசியுடன் டில்லியில் இருந்து கொண்டுவரப்பட்டு படப்பிடிப்பில் பயன்படுத்தப்பட்ட எருமை மாடு ஒன்றும் நடிக்கிறது-

கொடுமையின் மொத்த வடிவமான பஞ்சாயத்துத் தலைவன் இந்த எருமை மாட்டை ஏவி தனது எதிரிகளை பழி தீர்க்கிறான்-

இந்தப் படத்தில் நரேஷ்குமார், சுதாகர் "பூ ஒன்று புயலானது" படத்தில் நடித்த பி எல் நாராயணா "மௌனப் போராட்டம்" சஞ்சீவி நட்டன் பிரசாத் மற்றும் பலர் நடிக்கிறார்கள்-

வசனம், பாடல்களை கவிஞர் வைரமுத்து எழுத ஆர் ராமராவ் ஒளிப்பதிவைக் கவனிக்க சக்கரவர்த்தி இசை அமைக்க முத்யால சுப்பையா டைரக்ட் செய்கிறார்- [ந—10]



ஜீவிதா — ராஜசேகர்

தினபதி சினிமா

தெகியோவற்ற உதவி அரசாங்க பிரிவில் உள்ள தெகியோவிற்ற தமிழ் வித்தியாலயமும

## குடிமைத் தொழில் கைவிடப்படும்

தோப்பாய் மே 31

சிகை அலங்கரிப்பாளர் சமூகம் குடிமைத் தொழில் செய்வதை முற்றாக கைவிடுவது என தீர்மானித்துள்ளது.

இந்தத் தீர்மானம் யாழ் மனோகரா படமாளிகையில் நடைபெற்ற சிகை அலங்கரிப்பாளர் சங்க பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வடபகுதி சாதி அமைப்பு முறையில் பஞ்சமர் என்ற பிரிவில் உள்ளடங்கும் சிகை அலங்கரிப்பாளர்கள் குடிமைத் தொழில் ரீதியாக மரணச் சடங்கு; திருமணச் சடங்கு, குழந்தை பிறப்பு தொடர்பான சடங்குகளில் முக்கியமான கடமைகளை நிறைவேற்றுபவர்களாக பயன்படுத்தப்படுகின்றனர்.

இந்தச் சாதி அமைப்பு சடங்குகளை மாற்றி அமைத்து புதிய சமுதாய அமைப்பை தோற்றுவிக்கும் நோக்கில் சிகை அலங்கரிப்பாளர் சமூகம் குடிமைத் தொழிலை முற்றாக நிறுத்துவது எனத் தீர்மானித்துள்ளது.

சிகை அலங்கரிப்பாளர் சங்க பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு எஸ் இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் பிரதமவிருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அமைப்பாளர் திரு ராஜன் கலந்து கொண்டு உரையாற்றினார். (ரி-142)


முதலாம் ஆண்டை நினைவு கூரும் முகமாக

# பகிரங்க சொற்பொழிவு

| காலம் | இடம் |
| --- | --- |
| 3 ஜூன் 1990 | கொழும்பு 10 |
| ஞாயிற்றுக்கிழமை | ஸாஹிராக் கல்லூரி |
| மாலை | கபூர் மண்டபத்தில் |
| 4 மணிக்கு | நடைபெறும் |

ஏற்பாடு

## இமாம் கொமய்னி ஞாபகார்த்தக் கமிட்டி

அநுசரணை

ஈரான் இஸ்லாமியக் குடியரசு தூதரகம், கொழும்பு.

சகலரையும் அன்புடன் அழைக்கிறோம்

(மகளிருக்கு விசேட ஏற்பாடுகள்)

இமாம் கொமய்னி அவர்களின் வாழ்வின் நிகழ்வுகள் பற்றிய படக்காட்சியும் திரையிடப்படும்-

தினபதி
தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல- 1613
சுடர் 18 கதிர் 4499
— 1990 ஜூன் 2 —

# எல்லோருக்கும் இனியவரான இலக்கிய மேதை சொக்கன்

## இன்று அவருக்கு மணிவிழா

பேராசிரியர்

— கலாநிதி அ. சண்முகதாஸ் —

சொக்கனுக்கு ஒரு வரலாறு உண்டு- அதே போல் எம்முடைய வரலாற்றிலே சொக்கனுக்கு ஓர் இடமுண்டு-

சொக்கனுடைய பணிகள் பன்முகப்பட்டன- டாக்டர் நந்தி ஒரு தடவை குறிப்பிட்டது போல "இரவிலே வானத்தைப் பார்த்துச் சமயக் கட்டுரைகள் எழுதிவிட்டு காலையில் பூமியைப் பார்த்து முற்போக்குக் கதைகள் எழுதுபவர்" அவர்-

அவர் மரபு வழிக் கல்வியினையும் நவீன பல்கலைக்கழகக் கல்வியினையும் பெற்றவர்- இதனால் பழமைக்குப் பழமையானவராகவும் புதுமைக்குப் புதுமையானவராகவும் திகழ்ந்து வந்துள்ளார்-

மரபு வழிக் கல்வியாளர் சொக்கனைத் தம்முடன் இணைத்துக் கொள்வர்- முற்போக்கு எழுத்தாளர்களும் சொக்கனைத் தம்முடன் இணைத்துக் கொள்வர்-

இவ்வாறு பன்முகப்பட்டவர்களும் பயன் பெறத்தக்க வழியிலே சொக்கனுடைய பணிகள் அமைந்தன-

சொக்கன் நல்ல கவிதைகளும் படைத்தவர்- நவீன கவிதைகள் தொடக்கம் பழைய தமிழ்ச் சொற்களையும் கொண்ட மரபுக் கவிதைகளையும் அவர் பாடியுள்ளார்-

சொக்கன் ஒரு சிறந்த புனைகதை ஆசிரியர்- காலத்தை நன்குணர்ந்து தனது கதைகளைப் புனைபவர்- வரலாற்று நிகழ்வுகளிலே இவருக்கு ஒரு தனி ஈடுபாடுண்டு-

1987 இல் நடைபெற்ற இந்திய அமைதிப் படையின் இராணுவத் தாக்குதல்களின் நிகழ்வுகளைப் பின்னணியாகக் கொண்டு முதன் முதலாகச் சிறுகதை புனைந்தவர் சொக்கனே-

சமகால வரலாற்றிலேயுள்ள ஈடுபாடு போன்று தமிழிலக்கிய வரலாற்றிலும் இவருக்கு ஈடுபாடு உண்டு-

வெருடைய ஞானக் கவிஞன் சலதி போன்ற நவீனங்கள் தமிழிலக்கியங்களுடன் தொடர்புடைய

மரபுவழி இலக்கியங்களையும் ஆசிரியர்களையும் புதிய கோணத்திலே நோக்கும் தன்மை சொக்கனிடம் உண்டு-

சொக்கன் நாடக ஆசிரியர் மட்டுமன்றி நாடக ஆய்வாளராகவும் விளங்குகின்றார்- ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சி என்னும் தலைப்பில் பேராசிரியர் சு வித்தியானந்தனுடைய மேற்பார்வையிலே இவர் ஆய்வு மேற்கொண்டார்-

இவர் ஆய்வு செய்து சமர்ப்பித்த ஆய்வேட்டுக்குப் பேராதனைப் பல்கலைக்கழகம் முதுமாணிப் பட்டம் வழங்கியது-

ஈழத்துத் தமிழ் நாடகங்கள் எல்லாவற்றுக்குமே அடிப்படைகளாகவும் ஊற்றுக்களாகவும் விளங்குவன- எமது மரபு வழி வந்த பாரம்பரியமான நாட்டுக் கூத்துக்களே என்று சொக்கன் நன்கு ஆராய்ந்து கூறியுள்ளார்-

மரபுவழி நாடகங்களிலே அவருக்கிருந்த ஈடுபாட்டினை இதன் மூலம் உணரக் கூடியதாயுள்ளது-

தானாக நாடகங்களை எழுதிய பொழுதிலும் மரபுவழி இலக்கியக் கதைகளை அடிப்படையாகக் கொண்டே இவர் எழுதினார்-

சிலம்பு பிறந்தது, கவிஞன் பரிசு தெய்வப் பாவை போன்ற நாடகங்கள் இத்தகையனவே- சொக்கனின் மரபு வழிப்பணிகளுள் நாடகப் பணி விதந்து கூறப்பட வேண்டிய ஒன்றாகும்-

மரபுவழி இலக்கிய இலக்கண நூல்களை இக்கால மாணவர்கள் இலகுவாகப் படித்துப் பயன் பெற வேண்டுமெனச் சொக்கன் எண்ணினார்- இது தொடர்பாக இவர் ஆற்றிய பணி பாராட்டுக்குரியது-

தொகுப்புரை, விளக்கவுரை கொண்டனவாக அறநெறிப்பாமஞ்சரி, கந்தபுராணம் காசியன் உபதேசப் படலம் ஆகிய நூல்கள் அமைகின்றன-

மாணவர்களுக்கென உரை விளக்கம் கொண்டனவாகக் காரைக் காலம்மையார் புராணம், திருக்குறள் ஆகியன அமைகின்றன-

திருக்குறள் முழுவதற்கும் அவர் ஒரு பொழிப்புரையும் எழுதியுள்ளார்- திருக்குறளைப் படிப்பதற்கு இவ்வுரை இலகுவான உரையாக அமைந்துள்ளது-


ஆறுமுகநாவலருடைய இலக்கணச் சுருக்கத்தைப் படிப்பதே இன்றைய மாணவர்களுக்குக் கஷ்டமான காரியமாகவுள்ளது-

தமிழ் இலக்கண விதிகளை இலகுவாக மாணவர்கள் விளங்கிக் கொண்டு தமிழ் இலக்கிய மொழியின் இயல்புகளைத் தெளிவாக இனங்கண்டு விளங்குவதற்கேற்ற நூல்கள் தமிழ்மொழியிலே தேவையானவையாகும்-

சொக்கன் இத்தேவையை ஓரளவு நிறைவு செய்துள்ளார்- இவருடைய இலக்கணத் தெளிவு என்னும் நூல் இத்தகைய பணியைச் செய்கின்றது-

சொக்கன் எழுதிய கட்டுரைகள் பல மரபுவழி விடயங்களை அடிப்படையாகக் கொண்டன-

சொக்கனுடைய கால் மரபிலே நன்கு ஊன்றியிருந்தது- ஆனால் நவீனத்தை வெறுத்தொதுக்கவில்லை-



சொக்கன்

மரபுவழிப் பணிகளை ஆற்றுகின்ற போது இத்தகையதொரு பரந்த பார்வையினைச் சொக்கன் கொண்டிருந்ததாலேயே முற்போக்கு எழுத்தாளர்களும் இவரைப் போற்றினார்கள்-


ஒரு கூட்டத்தில் சொக்கன் பேசுகின்ற பொழுது "நாங்கள் தமிழ் படிக்கிறோம். பல்கலைக்கழகத்திலுள்ளவர்கள் தமிழைப் பற்றிப் படிக்கிறீர்கள்" என்று கூறினார்-

சொக்கன் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே இரண்டு வருட தமிழ் டிப்ளோமா பயிற்சி பெற்றவர்-

இப்பயிற்சிக்குப் பெரும்பாலும் தமிழ்ப் பண்டிதர்கள், தமிழாசிரியப் பயிற்சி பெற்றவர்களே அனுமதிக்கப்பட்டனர்-

இவர்கள் யாவரும் ஏற்கனவே தமிழ் கற்றவர்களாகையால் பல்கலைக்கழகத்திலே தமிழ் பற்றிய பயிற்சி கொடுக்கப்பட்டது-

எனவே தமிழ்ப் பயிற்சியும் தமிழைப் பற்றிய பயிற்சியும் பெற்ற சொக்கன் நவீன தமிழ்ப் பணிகளுடன் மரபுநெறிப் பணிகளையும் மேற்கொண்டது ஆச்சரியமன்று- (ம)



நூல் வெளியீட்டு விழா

## சொக்கன் மணிவிழா நிகழ்ச்சிகள்

முதுபெரும் எழுத்தாளர் சொக்கனின் மணி விழா இன்று சனிக்கிழமை யாழ் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் நடைபெறுகிறது.

மணிவிழா சபைத் தலைவர் திரு இ கமலநாதன் தலைமையில் விழா நடைபெறும். காலை 8 மணிக்கு ஆலய வழிபாட்டுடன் மணிவிழா ஆரம்பமாகும்.

காலை 9மணி முதல் 12 மணி வரை வைத்திய கலாநிதி இராமநாதன் அரங்கில் எழுத்தாளர் சொக்கன் படைத்த ஆக்கங்களின் கண்காட்சி ஒன்று நடைபெறும்.

பிற்பகல் 2 மணிக்கு விழா நாயகர் அவரது இல்லத்தில் இருந்து ஊர்வலமாக விழா நடைபெறும் சைவப் பெரியார் சு பரதிருபசிங்கம் அரங்குக்கு அழைத்து வரப்படுவார்.

விசேஷ மங்கள இசையுடன் அங்கு விழா நாயகருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்படும்.

பிற்பகல் 3 மணிக்கு நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர முகந்தையா கும்பன் கழக அமைப்பாளர் திரு இ ஜெயராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

பின்னர் சொக்கன் பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்படுவார், இதையடுத்து பெரியார் சம்பந்தர் அரங்கில் மணிவிழா மலர் வெளியிடப்படும்.

ஜப்பான் கூச்சுயின் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் மேற்படி மலர் பற்றி ஆய்வுரை நடத்துவார்.

மாலை 5.30 மணிக்கு பேராசிரியர் சு வித்தியானந்தன் அரங்கில் சொக்கனின் "மாருதப் பிரவல்லி" நாடக நூல் வெளியிடப்படும்.

யாழ் பல்கலைக்கழக சமூக மருத்துவத்துறை பேராசிரியர் சி சிவஞானசுந்தரம் (நந்தி) மேற்படி நூலை வெளியிட்டு வைப்பார். நுண்கலைத்துறை விரிவுரையாளர் குழந்தை ம சண்முகலிங்கம் ஆய்வுரை நடத்துவார். (ம-ர)

## உத்தியோக மொழி கொள்கை அமுல்

பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா அரச கரும மொழிக் கொள்கையை அமுலாக்குவது தொடர்பாக அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த அறிக்கை ஒன்றை அமைச்சரவை ஏற்றுக் கொண்டு விட்டது.

அரசாங்கத்தின் முந்திய மொழிக் கொள்கை, அதாவது சிங்களம் மட்டும் கொள்கை பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியிருந்ததை அமைச்சர் தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் பழைய மொழிக் கொள்கையை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் மாற்றிவிட்டது.

சிங்களத்தோடு தமிழும் உத்தியோக மொழியாக்கப் பட்டு விட்டது. ஆங்கிலம் இணைப்பு மொழியாக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கத்தின் இந்த உத்தியோக மொழிக் கொள்கையைச் சரிவர அமுலாக்குவதன் அவசியத்தை அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தமது அறிக்கையில் வலியுறுத்தியிருந்தார்.

உத்தியோக மொழிக் கொள்கையைச் சரிவர அமுலாக்குவதன் மூலம் நாட்டில் சுபீட்சமும் இனங்களிடையே இணக்கமும் ஏற்படும் என்றும் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தமது அறிக்கையில் மேலும் தெரிவித்திருந்தார்.

புதிய உத்தியோக மொழிக் கொள்கை உருவாக்கப்பட்டு நீண்ட காலமாகியும் அதை இன்னும் காத்திரமாக நடைமுறைப்படுத்த

## விவசாய கால்நடை அபி. சங்கம்

## இளைஞர், யுவதிகளுக்கு ரூ. 3,000 வீதம் நிதியுதவி

கொழும்பு, ஜூன் 1 பொத்துவில் விவசாய கால்நடை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் 60 இளைஞர் யுவதிகளுக்கு ஆடு கோழி வளர்ப்புக்கென தலா ரூ.

பொத்துவில் மெதடிஸ்த தமிழ் மகா வித்தியாலயத்தில் சங்கத்தின் தலைவர் திரு கீ சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது-

சுயதொழில் வேலை முயற்சி

முறைப்படுத்த முடியாமல் இருப்பதற்குச் சில காரணங்களையும் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

உத்தியோகத்தர்களில் பலருக்கு மொழித் தேர்ச்சியின்மை, மொழி பெயர்ப்பாளர்கள். தட்டெழுத்தாளர்கள், தட்டச்சு இயந்திரங்கள் முதலானவற்றின் பற்றாக்குறை ஆகியவற்றை அமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார்.

பொது மக்களிடையேயும நிர்வாகிகளிடையேயும புதிய உத்தியோக மொழிச் சட்டத்தை எடுத்து விளக்கி அவர்களுக்கு உத்தியோக மொழிக் கொள்கை அமுலில் ஆர்வம ஏற்படச் செய்ய வேண்டும என்றும அமைச்சர் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தக் குறைபாடுகள் எல்லாவற்றையும நிவர்த்தி செய்வதற்கான மார்க்கத்தை யும அமைச்சர் அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

அமைச்சரவை அந்த அறிக்கையை அப்படியே ஏற்றுக் கொண்டு விட்டது.

எனவே —

உத்தியோக மொழிக் கொள்கை அமுலுக்காக உத்தியோக மொழி ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்பட இருக்கிறது. அதற்காக சட்டம் இம மாதமே கொண்டுவரப்பட உள்ளது.

அரசாங்க கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்கு மொழிப் பயிற்சி அளிக்கப் படவிருக்கிறது

...லக்கியங்களுடன் தொடர்புடைய வரலாற்று நவீனங்களாகும்.

## "வில்லியம் கோபல்லாவ மாவத்தை"

கண்டியில் இருந்து கெடம்பே நோக்கி அமைக்கப்பட்டுள்ள புதிய வீதிக்கு வில்லியம கோபல்லாவ மாவத்தை என்று பெயரிடப்படும்.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் இப்பாதைக்கு முன்னாள் ஆளுநர் நாயகத்தின் சேவைகளை நினைவு கூரும முகமாக அவரது பெயரைச் சூட்ட போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சு முடிவு செய்துள்ளது.

(ஐ—032)

மொழிப் பயிற்சிப் பாடசாலைகளும ஆரமபிக்கப்படவுள்ளன.

பொது மக்கள் பயன்படுத்தும எல்லாப் படிவங்களும மும்மொழிகளிலும வெளியிடப்படவுள்ளன.

இது நல்ல ஆரமபம. காலம கடந்தாவது தமிழையும உத்தியோக மொழியாகப் பயன்படுத்துவதற்கு உருப்படியான நடவடிக்கை எடுக்கப்படுவது வரவேற்கத்தக்கதும மகிழ்ச்சிக்கு உரியதுமாகும.

அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா பாராட்டப்பட வேண்டியவர். அவர் தமது முயற்சியில் சோர்ந்துவிடக் கூடாது.

அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எஸ் எச் ஆதமபாவா (மதனி) எழுதிய "சாந்தி வழி" (குத்பாப் பேருரைகள்) நூலின் வெளியீட்டு விழா புறக்கோட்டை பழைய நகர மண்டபத்தில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படங்கள்.

முஸ்லிம சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர், கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுவதையும முஸ்லிம காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம எச் எம அஷ்ரப் எம பி நூல் பிரதியை வாங்குவதையும படங்களில் காணலாம.

(ஐ–007)

குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் (நல்லை திருஞானசமபந்தர் ஆதீனம) மகாராஜஸ்ரீ சது சண்முகநாதக் குருக்கள், சிவத்தமிழ்ச் செல்வி தஙகமமா அப்பாக்குட்டி, யாழ் கோட்டக்கல்வி அலுவலக உதவி கல்விப் பணிப்பாளர் திரு. சி தியாகராசா. யாழ் பல்கலைக் கழக இரசாயனத்துறையைச் சேர்ந்த கலாநிதி க மோகனதாஸ், நாயன்மார்க்கட்டு மகேஸ்வரி, வித்தியாலய அதிபர் திரு சி,

...வளர்ப்பதற்கென தலா ரூ. 3000 வீதம நித உதவி வழங்கியது.

மேற்படி நிதி கனேடிய நிறுவனத்திடம (சீடா) இருந்து பெறப்பட்டது.

பொத்துவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட வறுமை நிலையில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கே இவ்வுதவி வழங்கப்பட்டது.

மேற்படி நிதிக்கான காசோலை வழங்கும வைபவம

...

சுயதொழில் வேலை முயற்சிகளில் ஈடுபடுபவர்களுக்கான காசோலைகளை கல்முனை மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு எஸ் சிவராசா பொத்துவில் உதவி ஆணையாளர் திரு எஸ் டி சச்சிதானந்தம பொத்துவில் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு தயாரத்ன பொத்துவில் பகுதி பிரதேச கூட்டுறவு உத்தியோகத்தர் ஜனாப் அபுல் ஹசன் ஆகியோர் வழங்கியதுடன் சிறப்புரையினையும ஆற்றினர்.

மேற்படி திட்டத்தினை வகுத்து அவற்றினை நடைமுறைப் படுத்துவதற்கு சங்கத்தின் கடன் திட்ட உத்தியோகத்தர் திரு எஸ் பரமசோதி (சட்டத்தரணி) செயலாளர் திரு க நல்லதமபி ஆகியோர் பெரும பங்காற்றியுள்ளனர்.

இதைவிட விதவைகளுக்கும முகாமகளில் இருந்து தடுத்து வைக்கப்பட்டு விடுதலை பெற்றவர்களுக்கும உதவிகளை வழங்கவும நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஐ-ங)

# பயிலுநர் ஆசிரியர்களின் அவலநிலை நீங்குமா?

நாத்தாண்டி மே 31

புத்தளம மாவட்டத்தில் ஐந்து நாடாளுமன்ற தொகுதிகளுள்ளன. இத்தொகுதிகளிலிருந்து 52 பேர் தமிழ்மொழி மூலம பயிலுனர் ஆசிரியர்களாக நியமனம பெற்றுள்ளனர்.

இவர்களெல்லோருக்கும பயிற்சி வகுப்பொன்று புத்தளத்திலே நடைபெற்று வருகிறது. கல்பிட்டி, கொட்டராமுல்லை போன்ற இடங்களிலிருந்தும பயிலுனர் ஆசிரியர்கள் புத்தளத்துக்கே செல்ல வேண்டிய நிலையுள்ளது.

இவர்கள் சுமார் 50 மைல் தூரம பிரயாணம செய்தே இப்பயிற்சி வகுப்பில் பங்குபற்றுகின்றனர். இவர்களின் நாளாந்தச் செலவு சுமார் 50 ரூபாவுக்கும அதிகமாகும.

இதே நேரத்தில் சிங்கள மொழியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களுக்கு 7 இடங்களில் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

சிலாபம ஐக்கிய முஸ்லிம முன்னணியைச் சேர்ந்த தூதுக்குழுவினர் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள், மா... அமைச்சர் திரு பெஸ்... பெரேராவைச் சந்தித்து இக்கஷ்டமான நிலைமையை விளக்கிக் கூறினர்.

**மக்கள் பிரச்சனையில் தினபதி**

இத்தூதுக் குழுவில் முன்னணியின் செயலாளர் ஜனாப் எஸ் பி ஏ குப்பார், சிலாபம பிரதான பள்ளிவாசல் பரிபாலன சபை உறுப்பினர் ஜனாப் எம எஸ் எம ரஸ்ஸாக், சிலாபம நஸ்ரிய்யா மகா வித்தியாலய அதிபர் ஜனாப் எம எம ஜலால்தீன் மரைக்கார் ஆகியோர் இடம பெற்றனர்.

சிலாபப் பகுதியில் ஓரிடத்திலாவது பயிலுனர் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பொன்றை ஆரமபிக்குமபடி அமைச்சர், அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

ஆனால் அதிகாரிகள் இதனை செயல்படுத்தவில்லை. மாதாந்தம 1000 ரூபா சமபளம பெறும பயிலுனர் ஆசிரியர்கள் பயிற்சி வகுப்புகளுக்குச் செல்லுவதற்காக மாதாந்தம 250 ரூபா வரை செலவிட வேண்டிய நிலையிலுள்ளனர்.

இது மிகுந்த கவலை தரும நிகழ்ச்சியாகும. அதிகாரிகளின் கவலையீனம என்று மாறுமோ என்று பயிலுனர் ஆசிரியர்கள் வினவுகின்றனர். (ஐ)–225)

## சம்பிரக்ஞானந்த சுவாமிக்கு நினைவு அஞ்சலி

கொழுமபு ஜூன் 1

அமரத்துவம பெற்ற கொழுமபு இராமகிருஷ்ண மிஷன் சுவாமி சமபிரக்ஞானந்தரின் நினைவு ஆராதனை இன்று (சனிக்கிழமை) மிஷன் மண்டபத்தில் நடைபெறும.

இந்த சமய இந்து கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ் தலைமையில் இந்த ஞாபகார்த்த ஆராதனை நடைபெறுகிறது.

இன்று காலை 10 மணிக்கு பஜனை பக்திப் பாடல்கள், 11 மணிக்கு அன்னாரின் வாழ்க்கை முறை குறித்தும அவரது சேவை பற்றியும விசேஷ உரை நிகழ்த்தப்படும. முன்னாள் கல்வி அதிகாரியும. இந்து மகளிர் சங்கத் தலைவியுமான திருமதி ரத்னா நவரத்தினம உட்பட பலரும உரையாற்றுவர். நண்பகல் 12 மணிக்கு பிரசாதம வழங்கப்படும.

(ம-ர)

## ரூ. 68 லட்சம் மாத வருமானம்

வறக்காப்பொளை, மே 31

குருநாகல் மாவட்ட கொபேயிகன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம மாதாந்தம ரூபா 68 லட்சம வருமானமாக உழைத்து வருகின்றது.

இந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம பல்வேறு துறைகளில் பல தொழில் முயற்சிகளை ஆரமபிக்கவும நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

(ஐ–138)

கராச்சியில் 21 பேர் சுட்டுக்கொலை

# கலவரங்களை அடக்க இராணுவம் அழைப்பு

## பெனாஸிர் உத்தரவை அடுத்து ரோந்து நடவடிக்கைகள் அதிகரிப்பு

கராச்சி, ஜூன் 1

கராச்சியில் இடம்பெற்று வரும் மனித படுகொலைகளை அடுத்து இராணுவ உதவி கோரப்பட்டிருக்கிறது. பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ இராணுவத்தை அழைத்திருக்கிறார்.

கராச்சியில் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன வியாழக்கிழமை கராச்சியில் பயணிகள் 21 பேர் துப்பாக்கிச் சூட்டுக்கு இரையானார்கள்.

கராச்சி பஸ் நிலையத்தில் நின்ற பயணிகளை கார்களில் வந்த துப்பாக்கி மனிதர்கள் சுட்டுத் தள்ளினர்.

அங்கு நிறுத்தப்பட்டிருந்த அரசாங்க பஸ் ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இயந்திரத் துப்பாக்கியால் பயணிகள் சுடப்பட்டதால் 21 பேர் பலியாகினர்.

இந்தப் பயங்கரச் சம்பவத்தை அடுத்தே பெனாஸிர் இராணுவத்தை அழைத்தார், அவரின் உத்தரவின் பேரில் கராச்சி நகரில் இராணுவப் படையினர் ரோந்த நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கராச்சியின் பல பகுதிகளில்



பெனாஸிர்

இராணுவ பாதுகாப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

1988 ஆம ஆண்டில் இது போன்ற பாதுகாப்பு நிலையங்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டன,

1988 இல் பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் தீவிரவாதிகள் சுமார் 250 பேரைப் பலிகொண்டனர்.

இதனையடுத்தே பாதுகாப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன.

சிந்து மாகாணத்தில் இடம்பெற்று வரும வன்முறைகள் காரணமாக கடந்த இரு வார காலங்களில் சுமார் 300 பேர் இறந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (எ)

### டாக்ஸிகள் நொறுக்கப்பட்டு பெரும் சேதம்

அபிட்ஜான், ஜூன் 1

ஐவரி கொஸ்ட் டாக்ஸி சாரதிகள் சிலர் தம சகாக்களின் டாக்ஸிகளை அடித்து நொறுக்கி பெரும சேதம விளைவித்தனர்.

வேலைநிறுத்த அழைப்பொன்றை அலட்சியம செய்த சாரதிகளின் டாக்ஸிகளே அடித்து நொறுக்கப்பட்டன.

ஐவரி கொஸ்ட் சர்வதேச விமான நிலையத்தின் அருகில் இச்சமபவம இடம்பெற்றது. (எ)

வல்லரசு

### உச்சிமாநாட்டில் ஆயுத ஒப்பந்தங்கள் கைச்சாத்து

வாஷிங்டன், ஜூன் 1

வல்லரசுத் தலைவர்கள் ஜோர்ஜ் புஷ், மிக்காயல் கொர்பச்சேவ் ஆகியோர் வெள்ளியன்று ஆயுத ஒப்பந்தங்கள் பலவற்றில் கைச்சாத்திட்டனர்.

நீண்ட தூர ஏவுகணைகளைக் குறைப்பது தொடர்பான ஒப்பந்தமொன்றும கைச்சாத்திடப்பட்டது.

வல்லரசுகளின் கைவசமிருக்கும இரசாயன ஆயுதங்கள் தயாரிப்பதற்குத் தேவைப்படும நச்சு வாயுத் தொகையை குறைப்பதற்கான ஒப்பந்தமொன்றும கைச்சாத்திடப்படவுள்ளது.

இதுபற்றி வெள்ளை மாளிகை செயலாளர் மார்லின் பிட்ஸ்வாட்டர் தெரிவித்தார்

வெள்ளை மாளிகையில் வல்லரசுத் தலைவர்கள் பேச்சுவார்த்தைகள் நான்கு தினங்கள் தொடர்ந்து நடைபெறும,

இந்த நான்கு தினங்களுக்குள் உலக பிரச்சினைகள் எல்லாவற்றையும நாம தீர்த்து விட மாட்டோம.

எம்மைப் பிரித்து வைத்திருக்கும பிரச்சினைகளைத் தீர்ப்பது அவசியம.

இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கூறினார், (எ)

### அமெரிக்கா உத்தரவு

வாஷிங்டன், ஜூன் 1

லிபேரியாவில் வாழும அமெரிக்கர்களை நாட்டை விட்டு உடனடியாக வெளியேறுமாறு அமெரிக்கா பணித்திருக்கிறது.

தலைநகர் மொன்ரோவியாவை கிளர்ச்சி இராணுவம முற்றுகையிட்டுள்ளது. (எ)

## காஷ்மீர் விடுதலை: வல்லரசுகள் உதவ

### இஸ். தலைவர் வலியுறுத்து

ஸ்ரீநகர், ஜூன் 1

காஷ்மீர் இந்தியாவின் பிடியிலிருந்து மீட்சிபெற உலக இஸ்லாமிய நாடுகளும, வல்லரசு நாடுகளும உதவ வேண்டும.

இவ்வாறு காஷ்மீர் முஸ்லிம்களின் இஸ்லாமிய தலைவராக புதிதாகப் பதவியேற்றிருக்கும உமர் பாருக் (16 வயது) கோரிக்கை விடுத்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட தனது தந்தை மௌலவி மொகமட் பாருக் நினைவாக நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இரண்டு லட்சத்துக்கும அதிகமானோர் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்,

கடந்த 21 ஆம திகதி மௌலவி மொகமட் பாருக் இனம தெரியாத துப்பாக்கி மனிதர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரது நினைவாக நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் குரல் எழுப்பிய தீவிரவாதிகள்.

எமக்கு வேலை வாய்ப்புகள் தேவை இல்லை. அதிகாரம தேவை இல்லை. நாம ஐக்கியமாக செயல்படுகிறோம. எமக்குத் தேவைப்படுவதெல்லாம காஷ்மீர் சுதந்திரம தான் எனக் கூறினர். (எ)

### 15 பேர் பலி

பொகோட்டா, ஜூன் 1

கொலம்பியாவின் மத்திய பிராந்திய மலைப்பகுதியொன்றில் ஏற்பட்ட பயங்கர மண் சரிவொன்றில் 15 பேர் பலியாகினர்.

வீடுவாசல்களை இழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கு மதிகமென அறிவிக்கப்படுகிறது

நாட்டின் பல பகுதிகளிலும ஏற்பட்டிருக்கும வெள்ளப் பெருக்கினால் மக்கள் வீடுவாசல்களை இழந்துள்ளனர். புதையுண்ட மக்கள் இதுவரை மீட்கப்படவில்லை. (எ)

## உலகச் செய்திகள்

## பேருவில் 45 தடவைகள் தொடர்ந்து பூமி அதிர்ச்சி

### ருமேனியாவில் கோபுரக் கட்டிடம் இடிந்தது

லீமா, ஜூன் 1

பேரு வடமேல் அமேஸன் பிராந்தியத்தில் வியாழ

பேரைக் கண்டுபிடிக்க முடியாதிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வெடிப்புகளும ஏற்பட்டன, இதனால் பலர் காயமடைந்தனர்.

## பெனாஸிர்பூட்டோ: அரபு நாடுகளுக்கான சுற்றுலா ஒத்திவைப்பு

இரத்த வாந்தி எடுத்த

## இமெல்டா மார்க்கோஸ் நீதிமன்றத்தில் மயக்கம்

நியூயோர்க், ஜூன் 1

முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பேடினன்ட் மார்க்கோஸின் மனைவி இமெல்டா மார்க்கோஸ் இரத்தவாந்தி எடுத்த நீதிமன்றத்தில் மயங்கி விழுந்தார்.

நியூயோர்க் நீதிமன்றத்தில் வியாழனன்று வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த



# பெனாஸிர்பூட்டோ:

## அரபு நாடுகளுககான சுற்றுலா ஓத்திவைப்பு

இஸ்லாமாபாத், ஜுன் 1

அரபு வளைகுடா நாடு களுக்கு பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ மேற் கொள்ளவிருந்த சுற்றுலா ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

தனது சொந்த மாகாணமான சிந்து மாகாணத்தில் வன்முறை கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள் ளன. அங்கு பலர் படுகொலை செய்யப்பட்டும உள்ளனர்.

இதனை அடுத்தே பெனா ஸிர் தமது வளைகுடா நாடுகளுக் கான சுற்றுலாவை ஒத்தி வைத் திருக்கிறார்.

ஈராக், ஐக்கிய அரபு ராஜ் யம. குவைத், ஓமான் ஆகிய நாடுகளுக்கு இமமாதம முதல் வாரத்தில் பெனாஸிர் விஜயம செய்யத் திட்டமிட்டிருந்தார்,

இந்திய பாகிஸ்தான் நெருக் கடி பற்றி மேற்படி நாடுகளின் தலைவர்களுடன் பேச்சு நடத் தவே பெனாஸிர் அந்த நாடு களுக்குப் புறப்படவிருந்தார்.

இதுபற்றி வெளிநாட்டு அமை ச்சுப் பேச்சாளர் ஒருவர் கூறி னார்.

(எ)

## ருமேனியாவில் கோபுரக் கட்டிடம் இடிந்தது

லீமா, ஜுன் 1

பேரு வடமேல் அமேஸன் பிராந்தியத்தில் வியாழ னன்று மீண்டும அடுத்தடுத்து 45 தடவைகள் பூமி அதிர்ச்சி சமபவஙகள் இடமபெற் றன.

நூற்றுக்கணக்கானோ ரைப் பலிகொண்ட சமபவத்தின் பின் னர் இஙகு இடைக்கிடை பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாக அறிவிக் கப்படுகிறது.

பேரு நாட்டின் 20 ஆண்டு கால வரலாற்றில் இமமுறையே முதல் தடவையாக பயஙகர பூமி அதிர்ச்சி இடமபெற்றிருக்கிறது.

செவ்வாய் இரவு இடம பெற்ற 48 நிமிட நேர பூமி அதிர்ச்சியின் பின் சுமார் 800 பேரைக் கண்டுபிடிக்க முடியா திருப்பதாக அறிவிக்கப்படு கிறது.

செவ்வாய்க்கிழமையின் பின் 45 தடவைகள் இடைவிட்ட பூமி அதிர்ச்சிகள் தொடர்ந்ததாக அதிகாரிகள் கூறினர்.

ருமேனியாவில் இடமபெற்ற பூமி அதிர்ச்சி சமபவமொன்றை அடுத்து மக்கள் பீதிகொண்டு ஓட்டமெடுத்தனர். ஒருவரை ஒருவர் நெரித்து மிதித்தவண் ணம தாம கட்டிடஙகளை விட்டு ஓடியதாக ஒருவர் கூறினார்.

வியாழக்கிழமை இடமபெற்ற பூமி அதிர்ச்சியின் பின் 12 மணி நேரம கழித்து இஙகு மீண்டும பூமி அதிர்ச்சி ஏற்பட்டது.

10 மாடி கொண்ட கோபுரக் கட்டிடமொன்று இடிந்தது. வெடிப்புகளும ஏற்பட்டன, இதனால் பலர் காயமடைந்தனர். இந்தக் கட்டிடம வெடித்த காட்சியை 100,000க்கும அதிக மானோர் நேரில் கண்டதாக அறிவிக்கப்படுகிறது.

### டோக்கியோ

மத்திய டோக்கியோவில் வெள்ளியன்று பூமி அதிர்ச்சிச் சமபவமொன்று இடமபெற் றது.

இஙகுள்ள கட்டிடஙகள் பல அதிர்ந்தன. ஆயினும சேதஙகள் ஏற்படவில்லை.

பல்கேரியாவில் இடம பெற்ற பூமி அதிர்ச்சியின் போது ஒருவர் மாரடைப்பில் காலமா னார்.

(எ)

...மனைவி இமெல்டா மார்க்கோஸ் இரத்தவாந்தி எடுத்த நீதிமன்றத்தில் மயஙகி விழுந்தார்.

நியூயோர்க் நீதிமன்றத்தில் வியாழனன்று வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலேயே இமெல்டா மார்க்கோஸ் மயக்கமுடைந் தார்.

உடனடியாக அவர் ஆஸ்பத்தி ரிக்கு எடுத்து விரையப்பட்டார்,

திருமதி மார்க்கோஸ் நீதி மன்றத்தில் இருமி இரத்தம வாந்தி எடுத்ததற்கும அவருக்கு ஏற்கனவே இருக்கும உயர் இரத்த அழுத்த நோய்க்கும எது வித சமபந்தமுமே இல்லை.

இவ்வாறு இமெல்டாவின் டாக்டரான டேவிட்கேஸ் கூறி னார்.

இதற்கு முன்னரும நீதிமன்ற விசாரணைகளின் போது இரண்டு தடவைகள் திருமதி மார்க் கோஸ் நோய் வாய்ப்பட்டிருக் கிறார்.

அந்த இரு தடவைகளும விசாரணைகள் ஒத்திவைக்கப் பட்டன.

(எ)



இமெல்டா



# குழாய் கிணறுகள் அம்பாறையில்

## உடனே பணியை ஆரம்பிக்க ராஜாங்க அமைச்சர் பணிப்பு

கொழும்பு ஜூன் 1

அம்பாறை மாவட்டத்தில் குழாய்க் கிணறுகளை அமைக்கும் பணிகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட மக்களின் குடிதண்ணீர் பிரச்சினைகள் பற்றி அம்பாறை மாவட்ட முஸ்லிம் லீக் வாலிப முன்னணி தூதுக்குழு அமைச்சரைச் சந்தித்து எடுத்துக் கூறியது.

அப்போது அமைச்சர் இப்பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபைக்கு உத்தரவு இட்டார்.

அம்பாறை மாவட்டத்தின் தண்ணீர் பிரச்சினை தீர்க்கப்படாததால் மக்கள் தண்ணீர் பெறுவதற்குப் பல மைல்கள் நடந்து செல்ல வேண்டிய அவல நிலையையும் இக்குழு சுட்டிக் காட்டியது.

சம்மாந்துறையில் வாழும் மக்கள் தண்ணீருக்காகப் படும் பரிதாப நிலையையும் இக்குழு அமைச்சரிடம் எடுத்து விளக்கியது.

சம்மாந்துறை குழாய் நீர் விநியோகத் திட்டத்தை மிக விரைவில் திறக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உறுதி அளித்தார். (ஐ—007)

## உலமா சபையின் பிரசார மாநாடு

அக்மீமன, மே 31

அகில இலங்கை ஜுன்னத் ஜெமாஅத் மஸ்லிஸுல் உலமா சபையின் கொள்கை விளக்கப் பிரசார மாநாடு மௌலவி பாஸில் எம் ஐ அப்துஸ்ஸமத் ஆலிம் (பஹ்ஜி) தலைமையில், கஹட்டோவிட்ட முஹ்யித்தீன் ஜும்ஆ மஸ்ஜித் முற்றவெளியில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

மௌலவி அல்ஹாஜ் ஏ எல் எம் பதுர்தீன் ஆலிம், மௌலவி அல்ஹாஜ் எம் சி எம் ஹஸ்புல்லாஹ் (பஹ்ஜி) மௌலவி ஹிதாயதுல்லாஹ் (கபூரி) உட்பட பிரபல உலமாப் பெருமக்கள் இங்கு உரையாற்றினார்கள்.

கஹட்டோவிட்ட — ஓகொடபொல — உடுகொட ஆகிய பள்ளிவாசல்களின் ஜெமாஅத்தார் ஏற்பாடு செய்திருந்த மேற்படி கூட்டத்தில் பெருந்திரளான உலமாக்களும் — முஸ்லிம் பெருமக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ—034)



## ராஜாங்க அமைச்சருடன் சந்திப்பு

கம்பஹா மாவட்ட முஸ்லிம் சங்கத்தின் தூதுக்குழு ஒன்று அண்மையில் வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை அவரது அலுவலகத்தில் சந்தித்தது.

அமைச்சுடன் சம்பந்தப்பட்ட மாவட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியது.

சமர்ப்பிக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண்பதாக அமைச்சர் அங்கு உறுதி அளித்தார்.

சட்டத்தரணிகளான அல்ஹாஜ் ஏ எச். எல் ஏ சலீம், சக்கீன் காதர் டொக்டர் எம் ரீ. அப்துல்லா, ஜனாப் எம் ஏ தஃமான், ஜனாப் ரிஸ்வி பாவா, அல்ஹாஜ் எம் ஈ எம் லாயிர், அல்ஹாஜ் எஸ் ஏ. எம் தாஜுதீன் உட்பட சங்கத்தின் பிரமுகர் பலர் தூதுக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

தூதுக் குழுவினர் அமைச்சருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கையில் எடுக்கப்பட்ட படம். [படம்— ஏ எஸ் எம் பஷீர்] (ஐ—403)

## இலங்கையில் 1,90,000 ஆசிரியர்கள்

கண்டி மே 31

இலங்கையில் கடமையாற்றும் ஆசிரியர்களின் முழு எண்ணிக்கை 190000 ஆகும்—

இவர்களில் 46 சதவீதமானோர் பயிற்றப்படாதவர்கள்—

இவர்களுக்குப் பயிற்றுவிக்கும் திட்டத்தை கல்வி அமைச்சு துரிதப்படுத்த உள்ளது—

ஆசிரியர் கலாசாலைகள் மூலமும் தொலைப் பயிற்சி நெறியின் மூலமும் பாடசாலைகள் ஊடாகவும் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பொருட்டு கல்வி அமைச்சர் புதிய ஏற்பாடுகளை மேற்கொள்ள இருக்கின்றார்— (ஐ—017)

## காதல் ஜோடிகள் பொலீஸ் வலையில்

கொழும்பு ஜூன் 1

பாணந்துறை பகுதியில் நான்கு பிரதான ஹோட்டல்களிலிருந்து இருபது காதல் ஜோடிகளைப் பொலீஸார் அண்மையில் கைது செய்தனர்.

தற்காலிகமாக ஹோட்டல்களில் தங்கியிருந்த மேற்படி காதல் ஜோடிகளிடையே பாடசாலை மாணவர்கள், திருமணமான பெண்கள் யுவதிகள் போன்றோரும் காணப்பட்டனர். இது பற்றிப் பொலீஸார் தெரிவித்தனர்.

பல்வேறு பதவி வகிப்போரும், பிரபல வர்த்தகர்களும் இந்தப் பெண்களுடன் கைது செய்யப்பட்டதாக பொலீஸார் மேலும் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்களில் அநேகரின் கணவன்மார் வெளிநாடு சென்றுள்ளனர் என்றும் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்டோரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் பொலீஸ் நிலையத்துக்கு அழைக்கப்படுவார்கள். பின்னர் மேல் விசாரணைகள் நடத்தப்படும்.

அதன் பின்னர் பிரஸ்தாப காதல் ஜோடிகள் அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவர்.

இவ்வாறு பாணந்துறை பொலீஸ் தலைமையக பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு ஆர் பீ லின்டன் தெரிவித்தார். (எ—வ)

## வடதுதுககுளளான மாணவிகள்

பயமுறுத்தல் சுவரொட்டிகளினால்

## சுதந்திரகட்சி உத்தியோகத்தர்கள் தேர்தல் பணிகளில் ஈடுபடவில்லை

### மனுதாரர் தரப்பில் சாட்சியம்

கொழும்பு, ஜூன் 1

நவம்பர் மாதத்திலேயே மொனறாகலை மாவட்டத்

சாட்சி— ஆம்—

சட்டத்தரணி— அச் சமயம் வெள்ளவாய மற்றும் மொனறா

ஆனால் வெள்ளவாய அமைப்பாளர் ஜயசுந்தர இக்கூட்டத்தை நடத்த விரும்பவில்லை— சுவரொட்டிகள் காரணமாக அவர் அச்சமுற்றிருந்தார்—

சட்டத்தரணி— அடுத்தபடியாக

தல்லவா? பதுளையில் பெருமளவு வாக்கு வித்தியாசத்தில் ஐக்கிய தேசிய கட்சி வெற்றியீட்டியதல்லவா?

சாட்சி— ஆம—

அடுத்து சாட்சியமளிக்க எம டி டி சில்வா அழைக்கப்பட்டார்

ணம வீதியோரமாக நிற்பதைக் கண்டேன்— அப்போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது— நாமும் திருப்பிச் சுட்டோம்— இத்துப்பாக்கிச் சண்டை சுமார் 10 நிமிடங்கள் வரை நீடித்தது— எம்மைத் தாக்கியவர்கள் பாறைகளுக்குப் பின்னால் மறைந்திருந்தனர்—

சட்டத்தரணி— இச் சம்பவத்தில் யாரும் காயமுற்றனரா?

சாட்சி— ஆம— பின்னால் வந்த வாகனத்தில் பயணம் செய்த 3 உத்தியோகத்தர்கள் காயமடைந்தனர்— பொலீஸ் சாரதியும் காயத்துக்குள்ளானார்—

சாட்சியை சட்டத்தரணி கே என் சொக்ஸி குறுக்கு விசாரணைக்குட்படுத்தினார்—

## மக்களும் பதவியும்

### சண்முகநாத சபை நிர்வாகிகள்

மஸ்கெலியா, மே 31

மஸ்கெலியா ஸ்ரீ சண்முகநாத சபையின் நடப்பு வருட நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்—

போஷகர்கள்— இந்து சமய, தமிழ் அலுவல்கள் அமைச்சர் திரு பி பி தேவராஜ், தேவஸ்தான தலைவர் திரு பி ஆர் கருப்பையாப்பிள்ளை, முன்னாள் ஸ்ரீ சண்முகநாத சபைத் தலைவரான திரு எஸ் புஷ்பராஜ்,

தலைவர் திரு எம சேகர், உப தலைவர் திரு பீ செல்வராஜ்,

செயலாளர்— திரு எஸ் துரைசாமி, உப செயலாளர் திரு என் நீதிராஜா,

பொருளாளர்— திரு எஸ் கந்தசாமி.

பதினொரு பேரைக் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது— (ஐ—408)

### சனசமூக நிலைய நிர்வாகிகள்

குளியாப்பிட்டி, மே 31

குளியாப்பிட்டிய தொகுதி கெகுணகொல்ல அஸ்ஹர் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நடப்பு வருட உத்தியோகத்தர் தெரிவு நடைபெற்றது—

தலைவர்— எம எல் எம நிசாம (ஆசிரியர்), உதவித் தலைவர்— ஏ சி அதுமபுள்ளை (ஆசிரியர்). செயலாளர் எம ஆர் எம சித்தீக் (ஆசிரியர்) உதவிச் செயலாளர் எஸ் எம புவாத்—

பொருளாளர்— எம எஸ் சுலைமான் (ஆசிரியர்)—

விளையாட்டுக் குழுத் தலைவர்— ஜே பி ரோஹண— சபை நிர்வாக சபை உறுப்பினர்கள்—

எஸ் எல் சாஹுல் ஹமீத், ஐ எச் இஸ்ஹாக், ஏ சி நிஸார் (ஆசிரியர்), எம எஸ் மௌஜூத் என்பவர்களாகும— (ஐ—128)

### விளையாட்டு கழக நிர்வாகிகள்

கொழும்பு, ஜூன் 1

பொத்துவில் அல்பா விளையாட்டுக் கழகத்தின் பொதுக் கூட்டம் அண்மை

## மாணவிகள் ஆஸ்பத்திரியில்

கண்டி மே 31

கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி மாணவிகள் இருவர் கண்டி திருகோணமலை வீதியில் இடம்பெற்ற பஸ் விபத்தின் காரணமாக கண்டி பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சமபவத்தில் இரு மாணவிகளின் கால்களிலும முறிவு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கண்டி பொலிஸார் இது தொடர்பாக விசாரணை செய்வதுடன் இ போ ச பஸ்சும பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-017)

## இடியப்பம் விலையும் உயர்வு

கொழும்பு, ஜூன் 1

மாவின் விலை உயர்ந்ததை அடுத்த கொழும்பு ஹோட்டல்களில் இடியப்பத்தின் விலையும உயர்ந்தது.

இதுவரை காலமும 70 சதத்திற்கு விற்கப்பட்டு வந்த இடியப்பம நேற்று முன்தினம் முதல் 75 சதமாக விற்கப்படுகிறது.

பாணின் விலை 40 சதத்தாலும் 1 கிலோ மாவின் விலை 1 ரூபா 10 சதத்தாலும் கடந்த திங்கள் முதல் உயர்ந்தது தெரிந்ததே.

இதன்படி பாணின் விலை 5 ரூபா 30 சதமாகவும் 1 கிலோ மாவின் விலை 14 ரூபா25 சதமாகவும் இருந்து வருகின்றன.

(ந-கு)

## ஜனாதிபதி தேர்தல் வழக்கு

கொழும்பு, ஜூன் 1

நவம்பர் மாதத்திலேயே மொனறாகலை மாவட்டத்தில் தேர்தல் பயமுறுத்தல் சுவரொட்டிகள் தோன்ற ஆரம்பித்து விட்டன. இன்றைக் குண்டு சுதந்திரக் கட்சி உத்தியோகத்தர்கள் அச்சமுற்றனர். தேர்தல் பிரசார பணிகளில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொண்டனர்,

ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது மனுதாரர் தரப்பில் சாட்சியமளித்த டபிள்யூ எம ஸ்டான்லி செனவிரத்ன இவ்வாறு தெரிவித்தார்-

மொனறாகலையில் டிசம்பர் 17 ஆம திகதி நள்ளிரவு முதல் 20ஆம திகதி நள்ளிரவு வரை, ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக சுவரொட்டிகள் அறிவித்திருந்தன- டிசம்பர் 18 ஆம திகதி இரவு மொனறாகலை நகரில் குண்டுகள் வெடிக்கும் ஓசையும துப்பாக்கி வேட்டு சத்தமும கேட்டதாக இவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தார்-

திரு பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் ஈட்டிய வெற்றி செல்லுபடியாகாது என தெரிவித்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு பிரதம நீதியரசர் பாரிந்த ரணசிங்க நீதியரசர்கள் எச் டபிள்யூ தம்பையா ஜி பி எஸ் டி சில்வா, எம ஜமீல் வீ இராமநாதன் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது-

அப்போது அங்கு சாட்சியமளித்த ஸ்டான்லி செனவிரத்னவை மனுதாரர் தரப்பில் சட்டத்தரணி நிஹால் ஜயமான விசாரணைக்குட்படுத்தினார்-

சட்டத்தரணி- ஜனாதிபதித் தேர்தல் சமயம் நீர் மொனறாகலையில் சுற்றுப் பயணம செய்தீரா?

சாட்சி- ஆம்-

சட்டத்தரணி- அச் சமயம வெள்ளவாய மற்றும மொனறாகலை கட்சி அமைப்பாளர்களுடன் நீர் உரையாடினீரா?.

சாட்சி- ஆம-

சட்டத்தரணி- நீர் யாரைச் சந்தித்தீர்?

சாட்சி- பிபிலை சுதந்திரக் கட்சி அமைப்பாளர் அத்தநாயக்காவைச் சந்தித்தேன்- மொனறாகலையில் சுமேத ஜயசிங்கவையும வெள்ளவாயாவில் ஜயசுந்தர, மற்றும சூரியகே ஆகியோரையும சந்தித்தேன்-

சட்டத்தரணி- நவமபர் 18 ஆம திகதி மொனறாகலையின் மூன்று தேர்தல் பிரிவுகளுக்கும நீர் சென்றீரா?

சாட்சி- ஆம-

சட்டத்தரணி- பொது இடங்களில் நீர் தேர்தல் விரோத சுவரொட்டிகளைக் கண்டீரா?

சாட்சி- ஆம- வாக்காளர்களை அச்சுறுத்தும வகையில் அவை அமைந்திருந்தன-

சட்டத்தரணி- ஜனாதிபதி தேர்தல் பற்றி நீர் உம்மைச் சந்தித்தவர்களுடன் கதைத்தீரா?

சாட்சி- ஆம-

சட்டத்தரணி- சுவரொட்டிகள் காரணமாக தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் அச்சமடைந்திருந்தனரா?

சாட்சி- ஆம்-

சட்டத்தரணி- வெள்ளவாயாவில் நவமபர் 24 ஆம் திகதி நடக்கவிருந்த பிரசார கூட்டத்தில் திருமதி பண்டாரநாயக்கா கலந்து கொள்ளவிருந்ததால் அது பற்றி நீர் கட்சி உத்தியோகத்தர்களுடன் பேசினீரா?

சாட்சி- இதன் காரணமாகவே நான் கட்சி ஆதரவாளர்களுடன் கலந்தாலோசிக்க வெள்ளவாயா சென்றிருந்தேன்- நடத்த விரும்பவில்லை- சுவரொட்டிகள் காரணமாக அவர் அச்சமுற்றிருந்தார்-

சட்டத்தரணி- அடுத்தபடியாக நீர் என்ன செய்தீர்?

சாட்சி- நவம்பர் இருபதாம திகதி பண்டாரவளைக்குச் சென்று திருமதி பண்டாரநாயக்காவைச் சந்தித்தேன்- 24 ஆம திகதி வெள்ளவாயாவில் பிரசார கூட்டமொன்றை நடத்த முடியாதிருப்பதாக அவரிடம கூறினேன்- பின்னர் இக்கூட்டம ரத்துச் செய்யப்பட்டது- ஒரு வாரத்தின் பின்னர் மொனறாகலைக்குத் திரும்பினேன்-

சட்டத்தரணி- அச்சமயமாவது கட்சி அமைப்பாளர் பயப்பிராந்தி நீங்கியிருந்ததா?

சாட்சி- இல்லை- ஜயசுந்தர, தமது அரசியல் பணிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்திருந்தார்- அவரால் என்னைச் சந்திக்க முடியவில்லை- மொனறாகலை கட்சி அமைப்பாளரும தமது பணிகளைக் கைவிட்டிருந்தார்-

சாட்சியை சட்டத்தரணி கே என் சொக்ஸி குறுக்கு விசாரணை செய்தார்-

சட்டத்தரணி- ஜனாதிபதித் தேர்தலின் போது தான் நீர் முதல் தடவையாக தேர்தல் பணிகளில் ஈடுபட்டீரா?

சாட்சி- ஆம-

சட்டத்தரணி- இதற்கு முன்பாக நீர் ஒரு கட்சிக்கும பணியாற்றியதில்லையா?

சாட்சி- இல்லை-

சட்டத்தரணி- 1977 மற்றும 82 ஆம் ஆண்டு தேர்தல்களில் பயமுறுத்தல் சுவரொட்டிகள் காணப்பட்டனவா?

சாட்சி- நான் காணவில்லை-

சட்டத்தரணி- ஆனால் இவ்விரு தேர்தல்களிலும் ஐக்கிய தேசிய கட்சி பதுளையிலும மொனறாகலையிலும வெற்றியீட்டிய தேசிய கட்சி வெற்றியீட்டியதல்லவா?

சாட்சி- ஆம-

அடுத்து சாட்சியமளிக்க எம டி டி சில்வா அழைக்கப்பட்டார். இவர் பண்டாரவளை பொலீஸ் நிலைய சப்-இன்ஸ்பெக்டராவார்- 1988 டிசமபர் மாதம இவர் மொனறாகலை சியமபலாண்டுவ பொலீஸ் நிலையத்தில் பணியாற்றியிருந்தார்-

சாட்சியத்தை சட்டத்தரணி ஆர் கே டபிள்யூ குணசேகர நெறிப்படுத்தினார்-

சட்டத்தரணி- வாக்களிக்கும தினத்தன்று நீர் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தீரா?

சாட்சி- ஆம்- நான்கு பொலீஸ் உத்தியோகத்தர்கள் ஒரு சாரதி ஆகியோருடன் நான் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தேன்- ஒரு வாகனும எனக்கு ஒதுக்கப்பட்டிருந்தது- தோம்பகஹா மகா வித்தியாலத்துக்குச் சென்று வாக்குப் பெட்டிகளையும தேர்தல் உத்தியோகத்தர்களையும ஏற்றிக் கொண்டு வாக்குச் சாவடிகளுக்கு செல்லுமபடி பணிக்கப்பட்டிருந்தேன்-

இப்பணிக்கென பல வாகனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன- பல சாவடிகளுக்குச் சென்ற பின்னர் இறுதியாக மஹா களுகல்ல சாவடிக்கு காலை 7 மணியளவில் சென்றடைந்தோம- அதன் பின்னர் சியமபலாண்டுவ பொலீஸ் நிலையத்துக்குச் சென்றோம-

சட்டத்தரணி- திரும்பிச் செல்லுமபோது ஏதும நடந்ததா?

சாட்சி- ஆம- நாம மேலும் ஒரு வாகனத்துடன் பொத்துவில் பாதையூடாக சியமபலாண்டுவை நோக்கிச் சென்று கொண்டிருக்கும போது நெலுங்கல என்ற இடத்தில் வெடிச் சத்தங்கள் கேட்க ஆரமபித்தன- எமக்கு பின்னால் வந்த வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்க வேண்டுமென எண்ணிய நான் வாகனத்தைத் திருப்பி வந்த வழியே சென்றேன்- அப்போது எம்மைப் பின் தொடர்ந்த வாகனத்தினர்- பொலீஸ் சாரதியும காயத்துக்குள்ளானார்-

சாட்சியை சட்டத்தரணி கே என் சொக்ஸி குறுக்கு விசாரணைக்குட்படுத்தினார்-

சட்டத்தரணி- காட்டுப் பிரதேசம ஆரமபமாகும பகுதியிலா இச்சமபவம நடைபெற்றது?.

சாட்சி- ஆம-

சட்டத்தரணி- நீர் இச்சமபவத்தை பதிவு செய்தீரா?.

சாட்சி- ஆம முதலில் என் குறிப்பேட்டில் பதிவு செய்து கொண்டேன்- பின்னர் பதிவேட்டிலும குறிப்பிட்டேன்-

சட்டத்தரணி- இக்குறிப்பேடு உம்மிடம உள்ளதா?.

சாட்சி- ஆம-

பின்னர் கே டி அம்பன்பிட்டிய சாட்சியமளிக்க அழைக்கப்பட்டார்-

இவரை சட்டத்தரணி ஆர் கே டபிள்யூ குணசேகர விசாரணை செய்தார்- இவர் சியம்பலாண்டுவையைச் சோந்தவர்-

சட்டத்தரணி- சியமபலாண்டுவையில் சுதந்திரக் கட்சி கிளைக் காரியாலயம உள்ளதா?.

சாட்சி- ஆம- அக்கிளையின் செயலாளராக நான் பணியாற்றி வந்தேன்- ஜனாதிபதித் தேர்தலின் போது நான் செயலாளர் என்ற ரீதியாக தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டேன்-

சட்டத்தரணி- உமது பிரசாரம பாதிக்கப்படும வகையில் ஏதாவது நடைபெற்றதா?

சாட்சி- ஆம- திருமதி பண்டாரநாயக்க வேட்பாளர் மனுவைத் தாக்கல் செய்த பின்னர் தேர்தல் எதிர்ப்பு சுவரொட்டிகள் தோன்ற ஆரமபித்தன-

சட்டத்தரணி- நவமபர் மாதம வெள்ளவாயாவில் சுதந்திரக் கட்சி கூட்டம ஒன்று நடைபெறவிருந்ததா?

சாட்சி- ஆம்- ஆனால் இக்கூட்டம நடைபெறவில்லை-

(விசாரணை தொடரும)

(ந—032)

கொழும்பு, ஜூன் 1

பொத்துவில் அல்பா விளையாட்டுக் கழகத்தின் பொதுக் கூட்டம அண்மையில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவாகினர்:

போஷகர்கள்- ஜனாப் எம ஐ எம இப்றாஹிம, ஜனாப் எம ஐ காதர் முஹையதீன் ஜே பி (ஆசிரியர்),

ஆலோசகர்கள்- ஜனாப் எம ஐ ஆதமலெவ்வை (சட்டத்தரணி), ஜனாப் எஸ் ஐ எம ஆஸாத் மௌலானா,

தலைவர்- ஜனாப் என் அப்துல் வஹாப் (ஆசிரியர்), உப தலைவர்- திரு வீ அருளமபலம (ஆசிரியர்), பொதுச் செயலாளர்- ஜனாப் எம ஐ எம பழீல் (நூலகர்), உப செயலாளர்- ஜனாப் ஏ எல் எம இப்றாஹிம, பொருளாளர்- ஜனாப் ஏ ஜே தாஜுதீன், முகாமையாளர்- ஜனாப் ஏ எல் நிஸார்,

விளையாட்டுத்துறை தலைவர்- ஜனாப் ஏ கே நூஹுலெவ்வை (ஆசிரியர்),

உப விளையாட்டுத்துறை தலைவர்- ஜனாப் ஏ எல் காசிம வாவா,

(ஐ-ங)

## இந்து இளைஞர் மன்ற நிர்வாகிகள்

புசல்லாவ, மே 31

புசல்லாவ இந்து இளைஞர் மன்றத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் வருமாறு—

தலைவர்- செல்வன் எம லோகேஸ்வரன். செயலாளர்- செல்வன் பீ சந்திரமோகன். பொருளாளர்- செல்வன் அர் கிருஷ்ணசாமி. போஷகர்- திரு கே கார்த்திகேசு-

நிர்வாக சபை உறுப்பினர்களாக 20 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்-

# தேசிய விளையாட்டு விழா:

## சுற்றுப்போட்டிகள்

### 5ஆம் திகதி கொழும்பில் ஆரம்பம்

கொழும்பு ஜூன் 1

தேசிய விளையாட்டு விழாவுக்கான சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் ஐந்தாம திகதி முதல் கொழும்பில் ஆரம்பமாகும.

வலைபந்தாட்டம உதைபந்தாட்டம, எல்லே ஆண்கள் கரபந்தாட்டம, பெண்கள் கரபந்தாட்டம ஆகியவற்றுக்கான ஆரமப சுற்றாட்டங்கள் விளையாட்டுத்துறை அமைச்சு மைதானத்தில் நடத்தப்படவுள்ளன. மாவட்டஙகளுக்கு இடையிலான ஆட்டஙகளே இஙகு நடத்தப்படும.

16ஆவது தேசிய விளையாட்டு விழா எதிர்வரும ஆகஸ்ட் மாதம 31 ஆம திகதி ஆரமபமாகி செப்டமபர் இரண்டாம திகதி வரை எமபிலிபிட்டிய மகாவலி அரஙகில் நடைபெறவுள்ளது. மூன்று நாட்களுக்கு நடைபெறவிருக்கும இவ்விளையாட்டு விழாவில் இறுதி ஆட்டஙகள் மட்டுமே நடத்தப்படவிருப்பதால் தெரிவாட்டஙகள் அனைத்தும கொழும்பில் ஜூம மாதம முதலே ஆரமபிக்கப்படவுள்ளன.

வலைபந்தாட்டத்துக்கான ஆரமப சுற்றாட்டஙகள் எதிர்வரும ஐந்தாம திகதி ஆரமபமாகிறது பத்தாம திகதி இவ்வாட்டத்துக்கான அரையிறுதி தெரிவுகள மேற்கொள்ளப்பட்டுவிடும.

உதைபந்தாட்ட சுற்றாட்டம ஜூன் 13 ஆம திகதி ஆரமபமாகி இருபதாம திகதி அரையிறுதித் தெரிவுகள் நடத்தி முடிக்கப்படும. எல்லே ஆட்டத்துக்கான ஆரமப சுற்றாட்டம ஜூன் 22 ஆம திகதி ஆரமபமாகிறது. 28ஆம திகதி இவ்வாட்டத்துக்கான அரையிறுதி சுற்றாட்டம நடைபெற்று முடிவடையும ஆண்களுக்கான கரபந்தாட்ட ஆரமப சுற்றாட்டம ஜூலை ஒன்பதாம திகதி ஆரமபமாகி அதன் அரையிறுதி ஆட்டஙகள் ஜூலை 10 மற்றும 12ஆம திகதிகளில் நடத்தப்படும.

பெண்களுக்கான கரபந்தாட்ட சுற்றாட்டம ஜூலை 16ஆம திகதி ஆரமபமாகும. அரையிறுதி ஆட்டம ஜூலை 17 மற்றும 19ஆம திகதிகளில் நடைபெறவுள்ளது.

மேற்படி ஐந்து விளையாட்டுகளின் இறுதியாட்டஙகளே 16வது தேசிய விளையாட்டு விழாவில் நடத்தப்படும. மேற்படி மாவட்ட மட்டத்திலான தெரிவாட்டஙகளில் 25 மாவட்ட அணிகள் கலந்து கொள்கின்றன.

(ரீ–032)

## வெற்றி தோல்வி இன்றி முடிந்தது

புத்தளம மே 31

புத்தளம நவ்ஸ்டாா உதைபந்தாட்டக் கழகத்திற்கும ட்ரிப்பிள் செவன் உதைபந்தாட்டக் கழகத்திற்கும இடையே சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி ஒன்று அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் இரு கோஷ்டிகளும தலா ஒரு கோல் வீதம போட்டதால் ஆட்டம வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது.

புத்தளம நகரசபைத் திடலில் நடைபெற்ற இப்போட்டிக்கு ஜனாப் ஏ என் எம நியாஸ் நடுவராகக் கடமையாற்றினார்.

(ரீ-241)

## திரித்துவ கல்லூரி வெற்றி

மடவளை மே 31

பாடசாலைகளுக்கு இடையிலான மைலோ கிண்ணத்திற்கான றகர் போட்டியில் திரித்துவக் கல்லூரி வெற்றி பெற்றது.

அண்மையில் பேதிரிஸ் பூஙகாவில் நடைபெற்ற மேற்படி போட்டியில் கண்டி திரித்துவக் கல்லூரி ஆனந்தா கல்லூரியை 28–0 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

(ரீ–431)

முன்னணி வீரர்கள் இல்லை

## டெனிஸ் ஆட்டம் சோபை இழப்பு

பாரிஸ் ஜூன் 1

இப்போது பாரிஸில் ஆரமபமாகியிருக்கும பிரெஞ்சு பகிரஙக டென்னிஸ் போட்டியில் முன்னணி டென்னிஸ் வீரர்கள் பலர் கலந்து கொள்ளாததால் ஆட்டஙகள் சோபையிழந்துள்ளன.

உலகின் முன்னணி வீரரான இவான் லெண்டல் மற்றும மெட் விலாந்தர் ஆகிய இருவருமே பாரிஸ் பகிரஙகப் போட்டியில் இமமுறை கலந்து கொள்ளவில்லை.

பாரிஸ் பகிரஙகப் போட்டியில் கடந்த எட்டு ஆண்டுகளாகக் கலந்து கொண்டு வந்துள்ள இவ்விருவரும ஆறுவெற்றிகளைத் தமக்கிடையே பஙகிட்டுக் கொண்டனர் என்பது இஙகு குறிப்பிடத்தக்கது.

இவ்விருவரையும தவிர, மூன்றாவது பதக்குப் பேர்போன அமெரிக்க வீரர் ஜோன்மெக்கன்றோ மற்றுமொரு அமெரிக்கரான ஜிம்மி கானர்ஸ் ஆகிய இருவரும பிரெஞ்சு பகிரஙகப் போட்டியில் கலந்து கொள்ளவில்லை. ஸ்டீபன் எட்பேர்க் மற்றும பொரிஸ் பெகர் ஆகியோரும இமமுறை இப்போட்டியில் பஙகுபற்றவில்லை.

(ரீ–032)



## பாமிஸ் இயக்கத்தினர் சந்திப்பு

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒழுஙகு செய்யப்பட்ட தெற்கு ஆசிய நாடுகளின் 3ஆவது சர்வதேச இஸ்லாமிய மாநாட்டில் கலந்து கொண்ட உலக இஸ்லாமிய அழைப்பு நிறுவனத்தின் செயலாளர் நாயகம டாக்டர் மொகமட் அகமட் அல் ஷெரீப்பை, பாமிஸ் இயக்கத்தினர் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் வைத்து சந்தித்தனர். பாமிஸ் இயக்கத் தலைவர் ஜனாப் எம எம சுஹைர் தலைமையில் சென்ற குழுவினர் டாக்டர் ஷெரீபுடன் உரையாடிக் கொண்டிருக்கையில் எடுக்கப்பட்ட படத்தை மேலே காண்க.

இப்படத்தில் இடமிருந்து வலமாக பாமிஸ் இயக்க உபதலைவர் ஜனாப் என் எம அமீன், தலைவர் ஜனாப் எம எம சுஹைர், உலக இஸ்லாமிய அழைப்பு நிறுவனத்தின் இலஙகைவதிவிட பிரதிநிதி சகோதரர் முப்தா ஏ இம ஹமட், டாக்டர் ஷெரீப் ஆகியோர் காணப்படுகின்றனர்.

[படம்- எம ஏ பகுர்தீன்] (ரீ–035)




## விளையாட்டுத்தரம் உயர்வதற்கு ஊவா மாகாண சபை உதவும்

— முனிரட்ன

பதுளை மே 31

வெளிநாடு செல்லும ஊவா பிரதேச விளையாட்டு வீரர்களுக்கு ஊவா மாகாண சபை பலவிதமான உதவிகளைச் செய்துள்ளது, தொடர்ந்தும் விளையாட்டுத் தரத்தை உயர்த்த ஊவா மாகாண சபை உதவிகளை வழஙகும.

இவ்வாறு ஊவா மாகாண சபையின், விவசாய, உணவு, நீர்ப்பாசன வேலை வாய்ப்பு, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் திரு முனிரட்ன அத்தநாயக கூறினார்.

அண்மையில் பதுளை மாவட்ட உதவி அரசாஙக அதிபர் பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டிகளில பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். வெளி மாகாணஙகளுக்கும சென்று நாம பல போட்டிகளில் கலந்து கொள்ள வேண்டும.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

வெகுவிரைவில், ஊவா மத்திய மாகாணம, சப்பிரகமுவா மாகாணம ஆகிய மூன்று மாகாணஙகளுக்கு இடையே உதைபந்தாட்டம, ஆண் பெண், கரபந்தாட்டம ஆண், பெண் ஹொக்கி வலைபந்தாட்டம ஆகியவற்றை நடத்த எனது அமைச்சு மூலம ஏற்பாடு செய்யவுள்ளேன். இப்போட்டிகளில் வெற்றி பெறும கோஷ்டிகளுக்கு "ஊவா வெற்றிக் கேடயம ஒன்றையும மாகாண சபை மூலம வழஙகவுள்ளேன் எனவும கூறினார்.

அமைச்சு செயலாளர் திரு, திஸ்ஸ வர்ணசூரியவும உரையாற்றினார்.

(ரீ–037)

களுபோவிலை ஆஸ்பத்திரியில்

## மூளைக்காய்ச்சல் நோயினால் சிறுவன் மரணம்

கொழும்பு, ஜூன் 1

மூளைக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட சிறுவன் களுபோவிலை ஆஸ்பத்திரியில் மரணமானான்.

தெஹிவளை கல்வல வீதியைச் சேர்ந்த அமீன் மொஹமட் ரிஸ்மி என்ற சிறுவனே இவ்வாறு மரணமானான்.

மரண விசாரணை களுபோவிலை பெரியாஸ்பத்திரியில் வைத்து தெஹிவளை - கல்கிசை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு லயனல் எச் பெரேரா முன்னிலையில் நடைபெற்றது.

இறந்த சிறுவனின் தாயான சித்தி பரீனா (வயது 27) இஙகு சாட்சியமளிக்கையில் கூறியதாவது-

காலஞ்சென்ற எனது மகனுக்கு தொடர்ந்து 10 நாட்களாக காய்ச்சல் இருந்தது. தலையில் வருத்தமும இருந்தது. பல தடவைகள் மருந்து எடுத்தேன். ஆனால் நோய் திடீரென அதிகரித்தது.

உடனே நான் மகனை தெஹிவளை வீதியிலுள்ள டாக்டரிடம காட்டினேன். மகனை பரிசோதித்த டாக்டர் மகனுக்கு மூளைக் காய்ச்சல் ஏற்பட்டிருப்பதாக கூறினார்.

பின்னர் நான் மகனை களுபோவிலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன். அஙகு மகன் இறந்து விட்டான்.

விசாரணைகளின் முடிவில் மூளைகாய்ச்சலினால் ஏற்பட்ட மரணம் என தீர்ப்பு வழஙகப்பட்டது.

தெஹிவளை பொலீஸார் சாட்சியஙகளை நெறிப்படுத்தினர்.

(ந—வ)




6–30 இசைப் பயிற்சி —

ந ப —

## ஜூன் 2 (சனிக்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | |
|---|---|---|
| 0205 | சென்னை | யூ எல் 124 |
| 0500 | ரோம | யூ எல் 582 |
| 0515 | மஸ்கட், அபுதாபி | ஜீ எப் 3144 |
| 0655 | சிப்பல், பாரிஸ் அபுதாபி | யூ எல் 564 |
| 0720 | பிராங்க்போர்ட், சூரிச், டுபாய் | யூ எல் 548 |
| 0710 | சிப்பல், தஹ்ரேன் கராச்சி | கே எல் 301 |
| 0845 | டுபாய், மாலைதிவு | ஈ கே 802 |
| 1055 | திருச்சி | யூ எல் 132 |
| 1140 | சென்னை, பமபாய் | ஐ சி 573 |
| 1345 | மாலைதிவு, டுபாய், | ஈ கே 803 |
| 1355 | மாலைதிவு | யூ எல் 102 |
| 1550 | திருவனந்தபுரம | யூ எல் 162 |
| 1755 | பமபாய் சென்னை | ஐ சி 586 |
| 2230 | சிஙகப்பூர் | எஸ் கியூ 402 |
| 2250 | சிட்னி மெல்போர்ன் | யூ எல் 679 |
| 2315 | சென்னை | யூ எல் 122 |
| 2330 | சிஙகப்பூர் | யூ எல் 303 |
| 2355 | ஹொஙகொங, பாஙகொக் | யூ எல் 423 |

### புறப்படும நேரம

| | | |
|---|---|---|
| 0630 | மஸ்கட், அபுதாபி | ஜீ எப் 3144 |
| 0805 | திருச்சி | யூ எல் 131 |
| 0845 | பாஙகொக், ஹொஙகொங | யூ எல் 622 |
| 0930 | சிஙகப்பூர் | யூ எல் 302 |
| 0950 | டுபாய், மாலைதீவு | ஈ கே 802 |
| 1000 | மாலைதீவு | யூ எல் 101 |
| 1235 | சென்னை, பமபாய் | ஐ சி 573 |
| 1300 | திருவனந்தபுரம | யூ எல் 161 |
| 1450 | மாலைதீவு ,டுபாய் | ஈ கே 803 |
| 1730 | பஹ்ரேன் | யூ எல் 201 |
| 1840 | பமபாய், சென்னை | ஐ சி 586 |
| 1905 | கராச்சி, தஹ்ரேன் சிப்பல் | கே எல் 802 |
| 1945 | சென்னை | யூ எல் 121 |
| 2345 | சிஙகப்பூர் | எஸ் கியூ 402 |

## ஜூன் 3 (ஞாயிற்றுக்கிழமை)

### வந்து சேரும நேரம

| | | |
|---|---|---|
| 0445 | பஹ்ரேன் | யூ எல் 202 |
| 0545 | பஹ்ரேன், தோஹா | ஜீ எப் 144 |
| 0950 | பாரீஸ், மஸ்கட், சிங்கப்பூர் | யூ ரி 568 |
| 1020 | திருச்சி | யூ எல் 132 |
| 1225 | பாஙகொக் | ரி ஜி 307 |
| 1405 | திருவனந்தபுரம் | யூ எல் 162 |
| 2140 | மாலைதிவு | யூ எல் 102 |
| 2055 | சிஙகப்பூர், மஸ்கட், பாரீஸ் | யூ ரி 567 |
| 2230 | சிஙகப்பூர் | எஸ் கியூ 402 |

### புறப்படும நேரம .

| | | |
|---|---|---|
| 0045 | டுபாய், லண்டன் | யூ எல் 503 |
| 0100 | அபுதாபி, சிப்பால், பாரீஸ் | யூ எல் 563 |
| 0200 | டுபாய், சூரிச், பிராநுக்போட் | யூ எல் 547 |
| 0700 | பஹ்ரேன், தோஹா | ஜீ எப் 145 |
| 0730 | திருச்சி | யூ எல் 131 |
| 1100 | பாரீஸ், மஸ்கட், சிஙகுப்பூர் | யூ ரி 568 |
| 1115 | திருவனந்தபுரம் | யூ எல் 161 |
| 1325 | பாஙகொக் | ரி ஜி 308 |
| 1745 | மாலைதிவு | யூ எல் 101 |
| 1755 | பம்பாய், கராச்சி | யூ எல் 181 |
| 2055 | குவைத் | யூ எல் 227 |
| 2205 | சிஙகப்பூர், ம்ஸ்கட், பாரிஸ் | யூ ரி 567 |
| 2315 | புக்கியோகா, நெரிடா | யூ எல் 456 |
| 2345 | சிஙகப்பூர் | எஸ் கியூ 402 |

குறிப்பு— யூ எல் — எயர் லஙகா, ஐ சி — இந்தியன் எயர் லைன்ஸ், ஈ கே — எமிரேட்ஸ், எஸ் யூ — ஏரோபுளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிஙகப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ் கே யூ — குவைத் எயர்வேய்ஸ், எஸ் வீ — சவூதியா, எஸ் டி — ஸ்டேர்லிங எயர் லைன்ஸ், டி ஜீ — தாய் எயர் வேய்ஸ், பி பி பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, எல் டி பிரத்தியேக சேவை, டி கே — பிரத்தியேக சேவை, கே எல் — றோயல் எயர் லைன்ஸ்.

விமான சேவைகள் மாற்றம பற்றி அறியத் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம 452218, (விமான நிலையம)

அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து பேசிய அவர் கூறியதாவது- கிணற்றுத் தவளை போல் நாம எமக்குள்ளேயே விளையாடிக் கொண்டிருந்தால் எமது விளையாட்டுத் தரத்தை உயர்த்த முடியாது.

## மாகாண சபையுககு எழுபது எழுதுவினைஞர்

நாத்தாண்டி மே 31

புத்தளம, குருநாகல் மாவட்டஙகளில் கமநல சேவைக் குழுககளில் 70 பேரளவில் எழுது வினைஞர்களாகக் கடமையாற்றி வருகின்றனா.

அவர்கள் அனைவரையுமவடமேல் மாகாண சபையின் பொது எழுது வினைஞர் சேவையின் கீழ் சேர்த்துக் கொள்ளுவதற்கு இமமாகாண சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

பொது எழுது வினைஞர் சேவையின் கீழ் வழஙகுப்படும கொடுப்பனவுகள் இவர்களுக்கும வழஙகப்படும. இதற்குத் தேவைப்படும நிதியையும வடமேல் மாகாண சபை ஒதுக்கீடு செய்துள்ளது.

## அனுராதபுரத்தில் தமிழ்த்தின விழா

கெக்கிராவை மே 30

அனுராதபுர மாவட்ட தமிழ்த் தின விழாப் போட்டி நிகழ்ச்சிகள் அனுராதபுரம் விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன-

3ஆம பிரிவு கும்மி நடனப் போட்டி நிகழ்ச்சியில் கெக்கிராவை தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ் மந்திரிதேவி குழுவினர் முதலாம இடத்தைப் பெற்றுக் கொண்டனர்- (ஐ—158)




2—6—1990

காலை —
5-00 நாதாஞ்சலி
5-05 தோத்திரமாலை – வெஙகடேச சுப்ரபாதம
5-30 பாமாலை – நவக்கிரக ஸ்தோத்திரம
5-45 சைவ நற்சிந்தனை
5-50 கிறிஸ்தவ/கத்தோலிக்க நற்சிதனை
5-55 பக்திப் பாடல்
6-00 வர்த்தக சேவை
6-30 செய்திகள்
6-40 செய்தித்தாள் கண்ணோட்டம
6-50 அறிவிப்புகள்
7-00 வர்த்தகசேவை
7-45 மாகாணச் செய்திகள்
7-50 வர்த்தக சேவை
8-00 வீணை – சூரிய நாராயணன்
8-15 தமிழ் மூலம சிஙகளம – நடத்துபவர் என் டீ பீரிஸ்
8-30 மாணவர் மன்றம – எம எச் பௌசுல் அமீர்
9-00 வர்த்தக சேவை
பகல் —
10-00 கல்வியரஙகம
10-30 அறிவுச் சுடர் — தொகுப்பு: கே எஸ் பாலச்சந்திரன்
11-00 இசையமுதம
11-30 ஓடிவிளையாடு பாப்பா – நடத்துபவர்: ரேலஙகி செல்வராஜா
11-45 அரஙகேற்றம
12-00 வர்த்தக சேவை
12-45 செய்திகள்
12-55 அறிவிப்புகள்
1-00 வர்த்தக சேவை
மாலை —
6-00 செய்திகள்
6-10 அறிவிப்புகள்
6-15 ஞானக் கோவை
6-30 இசைப் பயிற்சி — ஏ என் நாராயணன்
6-45 நாட்டுப் பாடல்கள் – எஸ் விவேகானந்தன்
7-00 குன்றின் குரல் — தொகுப்பு: பி அந்தோனி முத்து
7-30 சர்வோதயம
7-50 உலகச் செய்திகள்
இரவு —
8-00 தர்ஜமதுல் குர்ஆன்
8-05 அஸ்மாவுல் ஹுஸ்னா
8-15 ஹஜ் யாத்திரை பற்றிய விளக்கவுரை மர்ஹூம மௌலவி ஏ ஏ எம மஸ்ஊத் ஆலிம அவர்கள் வழஙகியது.
8-25 முஸ்லிம செய்திகள்
8-30 இளைஞர் இதயம
8-50 இஸ்லாமிய கீதம
8-55 வரலாற்றில் ஓர் ஏடும குறிப்பும ஸலவாத்தும.
9-00 செய்திகள்
9-10 அறிவிப்புகள்
9-20 பக்திப் பாடல்கள்
9-30 நாடகம
10-00 இசைக் கச்சேரி — ஏ எஸ் நாராயணன்
10-45 நினைவில் நிறைந்தவை
11-00 ஒலிபரப்பு முடிவு.




2—6—1990

## ரூபவாஹினி

ஒளிபரப்பு ஒன்று —
மு ப —
7-00 ப்றேக்ஃபாஸ்ற் ஷோ
9-30 பிறநாட்டுப் பாடல்கள்
10-00 செய்திச் சஞ்சிகை
10-15 ஃபீச்சர் ஃபில்ம
ந ப —
12-00 ஒளிபரப்பு முடிவு.
ஒளிபரபு இரண்டு —
பி ப —
4-30 சமபத்
5-00 மாகாணச் செய்திகள்
5-30 சஙகமம
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 தமிழ்ப் பாடல்கள்
6-30 செய்திகளும காலநிலை அறிக்கையும – தமிழ்
7-00 உருளைக் கிழஙகு விவசாயம – மறுபார்வை
7-30 மிஸ்றர் வெல்வடர
8-00 செய்திகளும காலநிலை அறிக்கையும – சிஙகளம
8-30 வெத ஹாமினே
9-05 திர தறு சினமா தொரத்தறு
9-30 செய்திகளும காலநிலை அறிக்கையும – ஆஙகிலம
10-00 ற்றான்ஸ் வேர்ல்ட் ஸ்போட்
10-45 ஸ்கெயார் குரோ அன்ட் மிசிஸ் கிங
11-45 ஒளிபரப்பு முடிவு.

## ஐ. டி. என்.

பி ப —
4-59 நிகழ்ச்சி நிரல்
5-00 சிசெமி ஸ்றீற்
6-00 முமமணிகளுக்கு அஞ்சலி
6-15 மல் கெக்குளு
6-30 மது ரசாஙக
7-30 சனிக்கிழமை அதிஷ்டம
8-00 றேக் த ஹை றோட்
8-30 கிறெவுன் கோட்
9-00 கீத மேள
9-30 ஃபல்கன் கிறெஸ்ற்
10-00 செய்திகள் – ஆகிலம
10-25 நிகழ்ச்சி நிரல்
10-26 ஃபல்கன் கிறெஸ்ற் – தொடர்ச்சி
11-00 ஒளிபரப்பு முடிவு.

# தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்


இந்தமாதம் முடிவதற்குள்

# மாவட்டம் தோறும் கைத்தொழில் நிலையம்

கொழும்பு, ஜூன் 1

மாவட்டங்கள் தோறும் கைத்தொழில் நிலையங்கள் உருவாக்கப்படும். அதற்கான செயல் திட்டங்கள் இந்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் சகல மாகாணங்களிலும் தயாரிக்கப்படும். இந்த மாதம் முடிவடைவதற்குள் இந்த நிலையங்கள் இயங்கும்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மாநாடொன்றில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

உல்லாசப் பிரயாணத்துறை மற்றும் கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ் தொண்டமான் இந்த கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

கைத்தொழில் மற்றும் விவசாய திட்டங்களுக்கான சேவைகளை வழங்குவதற்காகவே இந்த கைத்தொழில் நிலையங்கள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இந்த விடயத்தை ஆராய்வதற்கே மேற்படி மாநாடு கூட்டப்பட்டது.

அமைச்சர் தொண்டமான் கூட்டத்தில் கூறியதாவது:—

கைத்தொழில்களுக்கும், விவசாயத்திற்கும் தேவையான சேவைகளை வழங்க மத்திய நிலையமொன்று இல்லை பல அரசாங்க நிறுவனங்களே இருக்கின்றன.

இந்த நிறுவனங்களில் சிலவற்றுக்கே மாகாண மாவட்ட மட்டத்தில் கிளைகள் இருக்கின்றன.

எனவே தான் மாவட்ட ரீதியாக சகல கைத்தொழில் சேவைகளையும் வழங்கக் கூடிய நிலையங்கள் தேவைப்படுகின்றன.

இப்படி அவர் கூறினார்.

அமைச்சரின் இந்த திட்டத்தை மாநாட்டில் கலந்து கொண்ட மாகாண முதலமைச்சர்கள் பாராட்டினர்.

கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் சமர்ப்பித்த பல பிரச்சினைகளுக்கு அப்போதே தீர்வுகளும் வழங்கப்பட்டன. (ந-ற)

பொலீஸாரினால்

## பெஜெரோ ஜீப்கள் வழிமறித்து சோதனை

### மா. சபை உறுப்பினர்கள் முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 1

மாகாண சபை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள "பெஜெரோ" ஜீப்கள் தொடர்பாக பொலீஸார் வீடுகளுக்கு வருகின்றனர். வழி மறித்தும் சோதனையிடுகின்றனர். இது மாகாண சபை உறுப்பினர்களின் சுய கௌரவத்தை பாதிக்கும் செயலாகும்.

மேல் மாகாண சபையின் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மேல் மாகாண முதலமைச்சர் திரு சுசில் முனசிங்காவிடம் இப்படி முறையிட்டனர்.

அண்மையில் மேல் மாகாண சபையின் மாதாந்த கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் போதே மாகாண சபை உறுப்பினர்கள் மேற்கண்டவாறு முறையிட்டனர்.

பொலீஸார் எமது வாகனங்களை அடிக்கடி வழி மறித்து சோதனையிடுகின்றனர். இதனால் எமக்கு உரிய நேரத்துக்கு மாகாண சபை கூட்டத்துக்கு சமுகமளிக்க முடிவதில்லை என அவர்கள் கூறினர்.

வாகனங்களை சோதனையிடும் போது மாகாண சபை உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தாம் பொலீஸ் மா அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்தி இறுதி முடிவு எடுப்பதாக முதலமைச்சர் திரு சுசில் முனசிங்க உறுதியளித்தார். (ந-வ)

## சொற்பொழிவு

கொழும்பு, ஜூன் 1

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் திகாமடுல்லை எம் பியுமான ஜனாப் எம் எச் எம் அஷ்ரஃப் "இன்றைய நூற்றாண்டில் முஸ்லிம் உம்மத்துக்கள் எதிர் நோக்கும் சவால்கள்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

மலித்துவை பொது விளையாட்டு மலித்துவை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள கூட்டத்திலேயே ஜனாப் அஷ்ரஃப் சொற்பொழிவாற்றுவார்.

காலி மாவட்ட முஸ்லிம் அபிவிருத்திச் சபை நலன் புரிச் சங்கம் மற்றும் மலித்துவை முஸ்லிம் வாலிப முன்னணி ஆகிய இயக்கங்களின் அனுசரணையுடன் மேற்படி கூட்டம் நடைபெறவுள்ளது. (ந)

1990ஆம் ஆண்டின்

## வாக்காளர் பதிவு

### பணிகள் இன்று முதல் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 1

1990 ஆம் ஆண்டின் வாக்காளர் பெயர்ப் பதிவுக்கான பணிகள் நேற்று முதலாம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பமானது.

தேர்தல் திணைக்களம் சகல கிராம சேவகர்களுக்கும் வாக்காளர் பதிவுக்கான விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைத்திருக்கிறது.

வாக்காளர்கள் இப்படிவங்களை நிரப்பி ஒரு மாத காலத்துள் குறிப்பிட்ட மாவட்ட தேர்தல் திணைக்களங்களுக்கு கிராம சேவகர்கள் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

வாக்காளர் இடாப்புகளை தயாரிப்பது தொடர்பாக கிராம சேவகர்களுக்கு விசேஷ (ஆலோசனை) வகுப்புகளும் நடத்தப்பட்டன.

கொழும்பு நகரில் இதுவரை காலமும் தேர்தல் திணைக்கள அதிகாரிகளே இந்த வாக்காளர் இடாப்பு வேலைகளில் ஈடுபட்டனர்.

ஆனால் இம்முறை இத்தகைய சேவைகள் அனைத்தும் கிராம சேவகர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ந-வ)

## மே மாத வாழ்க்கை செலவு புள்ளி

கொழும்பு, ஜூன் 1

மே மாதத்திற்கான வாழ்க்கைச் செலவுப் புள்ளி 994.5 ஆகும்.

குடிசன மதிப்பு புள்ளி விவர திணைக்களம் இதனை அறிவித்துள்ளது. (ந-455)

ஐ. தொ. கா. தலைவர் தெரிவு

## பொதுச் சபையே தீர்மானிக்க வேண்டும்

### நுவரெலியா மாவட்ட தலைவர்

கொழும்பு, ஜூன் 1

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் புதிய தலைவரை ஜூன் மாதம் கூடும் சங்கத்தின் பொதுச் சபையே நியமிக்க முடியும். அதற்கிடையில் உறுப்பினர்களிடையே சந்தேகங்களையும் மன வேறுபாடுகளையும் ஏற்படுத்தும் வகையில் தனிப்பட்டவர்கள் கருத்து வெளியிடுவது முறையாகாது.

ஐ தொ கா நுவரெலியா மாவட்டத் தலைவர் திரு எம் போகிராஜ் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இப்படி குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:—

தலைவர் மறைந்து 40 நாட்கள் கழியுமுன் புதிய தலைமைப் பதவியைப் பற்றிப் பேசுவது காலஞ்சென்ற தலைவருக்கு செய்யும் அவமதிப்பாகும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பொகவந்தலாவையில் நடைபெற்ற காலஞ்சென்ற தலைவருக்கான அனுதாபக் கூட்டமொன்றில் புதிய தலைவர் பதவிக்கும் புதிய செயலாளர் பதவிக்கும் இன்னாரின் பெயர்கள் பொதுச் சபையில் முன்மொழியப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் 10 ஆம் திகதி பொதுச் சபை கூடியே புதிய

கலவரங்களால் பாதிப்புற்ற

## ஆசிரியர்களுக்கு 2 வருட சம்பள முற்பணம்

### உடனடியாக வழங்க பணிப்பு

கொழும்பு, ஜூன் 1

கலவரங்களால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு 2 வருட சம்பள முற்பணத்தை உடனடியாக வழங்க வேண்டும்.

மாகாண கல்வி அமைச்சின் செயலாளர்களுக்கு ஊடாக மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் மேலதிக கல்விப் பணிப்பாளர்களுக்கும் கல்வி உயர் கல்வி ராஜாங்க அமைச்சரின் செயலாளர் இவ்வாறு பணித்துள்ளார்.

மேற்படி கொடுப்பனவு சம்பந்தமாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரஃபும் பொதுச் செயலாளருமான சா முகம்மது ராஜாவும் கல்வி உயர்கல்வி அமைச்சரை அண்மையில் சந்தித்த போது பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் கஷ்ட நிலை பற்றி எடுத்துக் கூறினர்.

இது விடயமாக உடனடி நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் அச்சமயம் வாக்குறுதியளித்தது குறிப்பிடத்தக்கது. (ந)


## வேலை வாய்ப்புக்கள்

1 குவைத் — KUWAIT

| | குவைத் டினார் | இலங்கை ரூபா |
| --- | --- | --- |
| 1 வாகன சாரதிகள் (Drivers) | 30 K.D. | 3990—00 |
| 2 கல்ப் லைசன்ஸ் வாகன சாரதிகள் (Gulf Licence Drivers) | 50 K.D. | 6650—00 |
| 3 எலெக்ரீசியன் (Electrician) | 50 K.D. | 6650—00 |
| 4 கிளீனர்ஸ் (Cleaners) | 35 K.D. | 4655—00 |
| 5 காப்பென்ரர் (Carpenters) | 50 K.D. | 6650—00 |
| 6 மேசன் (Masons) | 50 K.D. | 6650—00 |

இலவசம்! இலவசம்!!

அனைத்தும் இலவசம்

சவூதி அரேபியா

— 7 நாட்களில் பயணம் —

★ வீட்டுப்பணிப்பெண்கள்

(வயதெல்லை 30—40)

பாஸ்போட் அளவு 6 படங்கள் (4 கலர்) உடனடியாக தொடர்பு கொள்ளுங்கள்—

AMEEN ENTERPRISES

| | | | |
|---|---|---|---|
| | (Cleaners) | 35 | K.D. 4655—00 |
| 5 | காப்பென்ரர் (Carpenters) | 50 | K.D. 6650—00 |
| 6 | மேசன் (Masons) | 50 | K.D. 6650—00 |
| 7 | கனரக வாகன சாரதி (கல்ப் லைசன்ஸ்) H V Drivers Gulf Licence | 80 | K.D. 10640—00 |
| 8 | பிளம்பர் (Plumber) | 50 | K.D. 6650—00 |
| 9 | ரெய்லர் (பெண்கள்) Tailor (Female) | 40 | K.D. 5320—00 |

* இரண்டு வருட ஒப்பந்தம

* உணவு, தங்குமிட வசதி இலவசம—

மேலதிக விபரங்களுக்கு பாஸ்போட், பாஸ்போட் சைஸ் படம 6, தகுதி சான்றிதழ்கள் சகிதம நேரில் வரவும—

11 வீட்டுப் பணிப் பெண்கள் — House Maids

சிங்கப்பூர், ஓமான், சவூதி அரேபியா, குவைத், டுபாய், பாஹ்றெய்ன் ஆகிய நாடுகளுக்கு—

* பாஸ்போட், பாஸ்போட் சைஸ் படம 6, முழு அளவு போஸ்காட் சைஸ் படம 2, இவைகளுடன் நேரில் வரவும—

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி—

**Horizon Enterprises**

No. 9 19th Lane Kollupitiya
Colombo — 3

(சைனிஸ் லோட்டஸ் ஹோட்டல் முன்பாக கடற்கரைப் பக்கம செல்லும லேன்)

* லேபர் லைசன்ஸ் இல- 609

* அனுமதிப் பத்திர இல- ஏ எல்/609/15/90

* நாட்டின் சகல பாகங்களுக்கும சப் ஏஜண்டுகள் தேவை

* சப் ஏஜண்டுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும



இப்பத்திரிகை அச்சிட்டு வெளியிட்டது இண்டிபென்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை, கொழும்பு 12, இலங்கை, தபால் பெட்டி இல 1613, வெளியிட்ட திகதி: 2 ஜூன் 1990.

DINAPATHI 5. Gunasena Mawatha, Colombo— 12 P. O. Box 1613


சேவகர்களிடம ஒப்படைக்கப் பட்டுள்ளன. (ந-வ)

...டுள்ளது.

அறிக்கையில் மேலும குறிப்...

மறுவாழ்வு, மறுசீரமைப்பு

# திட்டங்களுக்கு புதிய நடைமுறை

கொழும்பு, ஜூன் 1

மறுவாழ்வு மறு சீரமைப்பு சமூக நல அமைச்சு தமது திட்டங்களின் இலக்குகளை அடையும பொருட்டு புதிய நடைமுறைகளைப் பின்பற்றத் தீர்மானித்திருக்கிறது—

இப்போது அமைச்சு கடைப் பிடித்து வரும செயல் முறைகள் திட்ட இலக்குகளை எட்டுவதாக இல்லை.

அமைச்சர் ஏ எம எஸ் அதிகாரி இதனையடுத்தே புதிய நடைமுறைகளை புகுத்த இருக்கிறார்.

இதைத் தொடர்ந்து மாகாண மட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அரச அதிபர் மற்றும உதவி அரச அதிபர்கள் ஆகியோரைச் சந்தித்து தமது புதிய செயல் முறைகளை எடுத்து விளக்க அமைச்சர் உத்தேசித்துள்ளார்.

இதன் கீழ் அமைச்சர் அதிகாரியும அமைச்சின் உயர் அதிகாரிகளும மாகாணங்களுக்கு விஜயம செய்து தமது புதிய திட்டத்தை எடுத்துரைக்க உள்ளனர்

[illegible] ஆம திகதி [illegible] [illegible] அமைச்சர் விஜயம செய்தார். [illegible] நுவரெலியா [illegible] மாத்தளை அம்பாந் தோட்டை இரத்தினபுரி கேகாலை கொழும்பு கம பஹா களுத்துறை பதுளை மொனறாகலை அநுராதபுரம பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களுக்கும விஜயம செய்வர், ஜூன் 2 ஆம திகதி வரை இச் சுற்றுப்பயணம நீடிக்கும.

(ஐ—032)

## மஷாயிகுமார் கந்தூரி மஜ்லிஸ்

கொழும்பு ஜூன் 1

அளுத்காமம் தர்ஹா நகர் ஆலிம ஸாஹிப் அப்பா தர்ஹாவில் 127 ஆவது வருட மஷாயிகுமார் கந்தூரி மஜ்லிஸ் கடந்த 25ஆம திகதி கொடியேற்றத்துடன் ஆரமபமானது—

தொடர்ந்த 9 நாட்கள் இஷாத் தொழுகைக்குப் பின் மஷாயிகுமார் ராதிப் ஓதப்பட்டு ஜூன் மாதம் 3ஆம திகதி நண்பகல் பெரிய கந்தூரி நடை பெறும—

அலவியா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய அல் [illegible] [illegible] அல் [illegible] (பர்பனீ) இம் மஜ்லிஸ்களுக்குத் தலைமை வகிப்பார்—

(ஐ—007)

ஜூன் மாதம 10 ஆம திகதி பொதுச் சபை கூடியே புதிய தலைவர் தெரிவு செய்யப்படுவார் என ஏற்கனவே கொழும்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டது—

அப்படி இருக்க, தலைவர் தெரிவு தொடர்பாக அதற்கு முன்னர் தனி நபர்கள் அறிவிப்பது கவலைக்குரியது—

இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது—

(ந-ற)

## வருடாந்த பொங்கல் விழா

ஏறாவூர், மே 31

ஸ்ரீமத் தட்சண கைலாய மெனப் பெயர் பெற்ற திருகோணமலையின் பூர்வதிக்குப் பக்கத்தில் அமைந்த மூதூர்ப் பகுதியில் சேனையூர் என்னும அழகிய திருப்பதியில் கோயில் கொண்டு எழுந்தருள் பாலிக்கும அருள்மிகு ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா நாளை 03-06-90 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம அதிகாலை வேளையில் சேனையூர் ஸ்ரீவர்ண குல விநாயகர் ஆலயத்திலிருந்து மடைப்பெட்டி தூக்கும வைபவத்துடன் ஆரமபமாகும நிகழ்ச்சிகள் இரவு 11 மணியளவில் திருவிழாவுடன் நிறைவு பெறும—

அடியார்களின் நலன் கருதி மூதூர் [illegible] சபையினர் [illegible] வரை [illegible] தெரிவித்தார்—

(ஐ—073)


**AMEEN ENTERPRISES**

511—Prince of Wales Avenue
Colombo — 14.
Licence & App — 625/14/15/17/18/23

"அல்ஹமதுலில்லாஹ்"

**அறிவித்தல்**

**புனித ஹஜ் யாத்திரை 1990**

**A. A. MOHAMED & Co. Ltd.**

**MOULANA TRAVELS**

எமமோடு ஹஜ யாத்திரை மேற்கொள்ளும அன்பர்களுக்கு 10-06-1990 ஞாயிறு காலை 9-30 மணி முதல் (Bayan), பயான் நிகழ்ச்சி பின்வரும இடத்தில் நடைபெறும—

22/3, Ambagaha Junction — Gothatuwa — Wellampitiya Colombo

* ஹஜ் கடமை பற்றிய விளக்கம

* வெளிநாட்டு செலவாணிக்கான ஏற்பாடுகள்.

* நோய்த் தடுப்பு, ஊசி மருந்து ஏற்றுதல் என்பவைகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன இந்த நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளுமாறு அன்பாய் அழைக்கிறோம—

எமது பிரயாணத் திகதி 23-06-1990 காலை 8 மணிக்கு ஏயார் லங்கா விமானம மூலம ஆரமபமாகும—

முக்கிய குறிப்பு ஹாஜிமார்கள் காரியாலயத்திற்கு காலை 9-30 க்கு சமுகமளித்து (Bayan) பயான் நடைபெறும மஜ்லிஸ்க்கு செல்லப்படுவார்கள் (நேரடியாக வர முடியுமானவர்கள் நேரே வருவதை வரவேற்கிறோம்) உங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கிறம—

**A. A. MOHAMED & Co. Ltd.**

173 1/2. 2nd Cross Street.
Colombo — 11 —

**MOULANA TRAVELS**

9. Keyzar Street
Colombo — 11